Nallur Branch Library

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆடி 31 | 16-08-94 | செவ்வாய்க்கிழமை | ஓசை 179

## உப்பு இறக்குமதி செய்ய சிறிலங்கா அரசு முயற்சி

சிறிலங்காவின் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் உப்பு இறக்குமதியில் ஈடுபட வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டை பகுதியில் இருக்கும் உப்பளத்தின் ஊழியர்களும் மெதுவாக வேலை செய்யும் இயக்கத்தை ஆரம்பித்திருப்பதை அடுத்து சந்தையில் உப்புக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பது இந்த நிலைமைக்கு முக்கிய காரணமாகும். சிறிலங்கா உப்பு இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (6-ஆம் பக்கம் பார்க்க)

# தென்னிலங்கையில் பெரும் பதற்ற நிலை; வாக்களிப்பின் பின் வன்முறை வெடிக்கலாம்

## திருமலையில் புலிகள் அதிரடி; இரு படையினர் பலி; ஆயுதங்கள் மீட்பு

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் அலுத்தோயா இராணுவ முகாமிலிருந்து வெளியேறி வீதிச் சோதனைக்கு வந்த இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர். இதன் போது இரு படையினர் கொல்லப்பட்டதுடன் சில ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

நேற்று முன்தினம் அதிகாலை 5.50 மணியளவில் திருகோணமலை மாவட்டம் அலுத்தோயா என்ற இடத்தில் உள்ள இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் வீதிச் சோதனைக்கு வந்தபோதே விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலின் போது இரு படையினர் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை.

இத்தாக்குதலின் போது புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுத விபரங்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| ★ ரி56 - 1 ரக துப்பாக்கி | — | 02 |
| ★ ரவைக் கூடு | — | 05 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 114 |
| ★ ஜே. ஆர். ரக கைக்குண்டு | — | 02 |
| ★ கெல்மெட் | — | 01 |
| ★ ஏ. கே. கோல்சர் | — | 01 |
| ★ தொப்பி | — | 01 |

## விழுப்புண் அடைந்த 5 போராளிகள் வீரச்சாவு

கடந்த 11-ம் திகதி இடம் பெற்ற கட்டுமுறிவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பின் போது விழுப்புண் அடைந்திருந்தஐந்துபோராளிகள் நேற்று முன்தினம் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த;

● 2-வது லெப். பால்ராஜ் (செல்லையா பத்மநாதன், மட்டக்களப்பு)

● 2-வது லெப். சத்தியசீலன்/சரண்ராஜ் (சிவப்பிர

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச் சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## விபரம் அனுப்ப பணிப்பு

கடமை நிறைவேற்று அதிபர்களாக கடமையாற்றி தற்காலிக நியமனக் கடிதம் வழங்கப்பட்டு, பின்னர் கல்வி அமைச்சினால் நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுக் கடமையாற்றும் அதிபர்களில் இதுவரை நிரந்தர நியமனக்கடிதம் வழங்கப்படாமல் இருந்தால் அவர்கள் பற்றிய விபரங்களை உடன் பூர்த்திசெய்து விதப்புரையுடன் அனுப்பி வைக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சு சகல கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களைப் பணித்துள்ளது.

## இன்று மூடப்பட்டிருக்கும்

கோண்டாவிலில் அமைந்துள்ள அனுமதிக்கான விசாரணைச் செயலகம் இன்று திறக்கப்படமாட்டாது என்பதை பொதுமக்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத்தருகின்றனர்.

## உஷார் நிலையில் ஆயுதப்படையினர்

(கொழும்பு)

**இன்று நடைபெறவுள்ள பத்தாவது பாராளுமன்றத்திற்கான வாக்களிப்பைத் தொடர்ந்து பெரும் வன்முறை வெடிக்கலாம் எனக் கொழும்பிலிருந்து வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ் வன்முறைகள் திட்டமிட்ட முறையில் கண்மூடித்தனமான அளவில் இடம் பெறலாம் எனவும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.**

இதுகுறித்து பி.பி.ஸியின் கொழும்புசெய்தியாளர் தெரிவிக்கையில், கொழும்பிலும், அதன்சுற்றுப்புறங்களிலும்ஒரு பதற்றநிலை நிலவுவதாகத் தெரிவித்தார். இதேசமயம், தென்னிலங்கையின் ஏனைய பகுதிகளில் ஒரு மயான அமைதி நிலவுவதாகவும். ஒரு சிறு சம்பவமும், பெரும் வன்முறையாக வெடிக்கக் கூடிய சூழ்நிலையே இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

இதேவேளை, அரசாங்கமும் பெரும் வன்முறை ஒன்று ஏற்படலாம் எனக் கருதுவதாகவே உள்ளது இதன் காரணமாக முப்படைகளும், பொலிசாரும் உஷார் நிலை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகால - ஊரடங்கு சட்டங்கள் இன்று நள்ளிரவு முதல் அமுல்

(கொழும்பு)

தேர்தலின் பின்பாக நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் வன்முறைகளைத் தடுக்கும் முகமாக இன்று நள்ளிரவு முதல் அவசரகாலச் சட்டம் மீண்டும் அமுல்படுத்தப்படலாம் என செய்திகள் தெரிவிக்கின்றன. இது தொடர்பான பிரகடனத்தில் ஜனாதிபதி இன்று கையெழுத்திடுவார் என அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்

மேலும் இன்று நள்ளிரவு முதல் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தப் போவதாக ஜனாதிபதிடி.பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.


தேர்தல் முடிவுகள் வெளிவரத் தொடங்கும்போது

## உலங்குவானூர்தி தாக்கு;

## உலங்குவானூர்தி தாக்கு; இரு போராளிகள் வீரச்சாவு

(முல்லைத்தீவு)
முல்லை மாவட்டத்தில் நேற்றைய தினம் பயிற்சியில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகள் மீது சிறிலங்காவின் உலங்குவானூர்தி ஒன்று தாக்குதல் மேற்கொண்டது இத

(6ஆம் பக்கம் பார்க்க)



கப்டன் இசைமாறன் (கவாஸ்கர்)



வீரவேங்கை கருநளன்

## ஷெல் வீச்சில் காயமடைந்த மேலும் ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)
சிறிலங்கா இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புகள் மீது கடந்த சனிக்கிழமை மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலுக்குப்பலியானோர் தொகை ஒன்பதாக உயர்ந்துள்ளது.

மேற்படி எறிகணை வீச்சுக்கு இலக்காகி படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த அச்சுவேலி தெற்

(6ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் கெடுபிடியால் கப்பல் வருகையில் தாமதம்

(யாழ்ப்பாணம்)
கோதுமை மாவுடன் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு நேற்று காலை வந்த றுகுணு கப்பல் கடற்படையினர் பிரிசோதனை செய்வதில் ஏற்பட்ட தாமதத்தால் மதியம் ஒரு மணிக்கு பின்னரே பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்தது.

மேற்படி கப்பலில் 950 மெற்றிக்தொன் கோதுமை மா எடுத்துவரப்பட்டுள்ளது. கப்பல் பருத்தித்துறை துறை

(6ஆம் பக்கம் பார்க்க)

# பொதுத்தேர்தல் வாக்களிப்பு இன்று காலை 7 மணிக்கு ஆரம்பம்

(கொழும்பு)
1994ஆம் ஆண்டு சிறிலங்காவின் 10-வது பாராளுமன்றத்தை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு இன்று காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகிறது.

9533 வாக்குச் சாவடிகளில் வாக்களிப்புகள் இடம்பெறுகின்றன. ஒருகோடி ஒன்பது லட்சத்து நாற்பத்தையாயிரத்து இருநூற்று நாற்பத்தேழு வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். 13 பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளையும் 26 சுயேட்சைக் குழுக்களையும் சேர்ந்த 1440 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## முதலாவது தேர்தல் முடிவு இன்று நள்ளிரவு வரும்

(கொழும்பு)
சிறிலங்காவின் 10-வது பாராளுமன்றத்தை தெரிவதற்காகஇன்றுநடைபெறவுள்ள பொதுத் தேர்தலின் முதலாவது முடிவு இன்று நள்ளிரவு அளவில் வெளிவரும் என தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

வாக்குகளை துரிதமாக எண்ணுவதத்காக 1188 வாக்குகளை எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகள் 146 நிலையங்களில் வைத்து எண்ணப்படும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## நாளை, நாளை மறுதினம் பொது விடுமுறை நாட்கள்

பொதுத் தேர்தலை முன்னிட்டு நாளையும், நாளை மறுதினமும் பொது விடுமுறைத் தினமாக அரசாங்கத்தால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் அவசரகால விதிகளின் கீழ் விடுத்த பணிப்புரைக்கு அமைய, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார். கூட்டுத்தாபனங்கள், சபைகள், அரசுக்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

## 10-வது பாராளுமன்றம் 25-ம் திகதி கூடும்

(கொழும்பு)
சிறிலங்காவின் பத்தாவது பாராளுமன்றம் எதிர்வரும் 25-ம் திகதி முதற்தடவையாக கூடவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. விகிதாசார பிரதிநிதித்துவமுறையின் கீழ் நடைபெறும் இன்றைய தேர்தலில் தேர்ந்தெடுக்கப் படவுள்ள 196 பிரதிநிதிகளும் 29 தேசியப் பட்டியல் பிரதிநிதிகளுமாக 225 உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பர்.

ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

வரத் தொடங்கும்போது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலிருந்து தமிழர் வெளிநாடுகளுக்கு பயணம்

(கொழும்பு)
கொழும்பில் இருந்து பெரும் தொகையான தமிழர் வெளியேறிக்கொண்டிருப்பதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்காவின் பத்தாவது பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து தமிழர் மீது தாக்குதல் நடைபெறலாம் என்ற பீதியினால் இவர்கள் கடந்த இரண்டு மூன்று தினங்களாக பெருமள

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு நகரைப் பாதுகாக்க இரு விசேட படைப்பிரிவுகள்

### கட்டுநாயக்காவிற்கு 300 பேர் கொண்ட ராணுவ அணி

(கொழும்பு)
கொழும்பு நகரைப் பாதுகாக்க இரு விசேட பாதுகாப்பு படைப் பிரிவுகளை பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னூறு இராணுவத்தினரைக் கொண்ட விசேட அணியொன்றை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் நோக்குடன் நிறுத்த இருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது

# கன்மூடித்தனமான வன்முறைக்கு ஐ. தே. க. திட்டமிட்டுள்ளது

### பேராசிரியர் பீரிஸ் குற்றச்சாட்டு

ஆளும் ஐ. தே. கட்சி கண்மூடித்தனமான முறையில் வன்முறைகளை கட்டவிழ்த்து விட திட்டமிட்டிருப்பதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

வன்முறைகளை கட்டவிழ்த்து விடுவதன் மூலம் வாக்காளர்கள் வாக்குச் சாவடிகளுக்கு செல்வதை தடுப்பதன் மூலம் பெருமளவில் மோசடிகள் நடத்தப்படுவதற்கும் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

எனினும் இக் குற்றச்சாட்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் அரங்கு உள்ளே

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வை முன்னிட்டு விசேட மாணவர் அரங்கு இன்றைய ஈழநாதத்தில் வெளிவந்துள்ளது.

## சுதந்திரமான தேர்தல் வடக்கில் நடைபெறுமாம்

### -மேஜர் ஜெனரல் லக்கி அல்கம கூறுகிறார்

(கொழும்பு)
வடபகுதியில் தேர்தல் சுதந்திரமான முறையிலும் நேர்மையாகவும் நடைபெறும் என்றும் ஆயுதப்படையினரும் பொலிசாரும் சுமுகமான தேர்தலை நடாத்துவதற்கு சிவில் அதிகாரிகளுக்கு உதவி வருகிறார்கள் என்றும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**SLAS**

SLAS பரீட்சைக்குரிய நூல்கள் நுண்ணறிவு, கிரகித்தல் விற்பனையாகின்றன. ஆக்கியோன் கலாநிதி க. குணராசா பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். (9104)

**காணவில்லை**

நல்ல இன அல்ஷேசன் ஆண் நாயைக் காணவில்லை பிடித்து வைத்திருப்போர் அல்லது தகவல் தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

சபா விற்பனை நிலையம் இருபாலை or அச்சுவேலி. (9109)

**விற்பனைக்குண்டு**

NO. 7, அலர் தகரப்பெட்டியுடன் விற்பனைக்குண்டு பிள்ளையார் மில் தாவடி மானிப்பாய் வீதி, தாவடி. (சி/ 10117)

**இரக்கமான வேண்டுதல்**

கொக்குவில் பொற்பதிவீதி பிள்ளையார் கோவில் முன்பாக உள்ள வீட்டிலிருந்து குட்டி ஈன்ற பொமேரியன் பிறவுண் நிற சிறிய நாய் ஞாயிறு பகலிலிருந்து காணாமல் போய்விட்டது. குட்டி பாலுக்குக் கத்துகிறது: தயைகூர்ந்து தெரிந்தவர்கள் தகவல் தருக.

பொன். தில்லைநாயகம். (8110)

**1995 இல் யார் ஜனாதிபதி?**

(மகர ராசி) சந்திரிகாவின் ஜாதகத்திலே கர்க்கடக லக்கினத்திற்கு 10-ம் வீட்டில், வெள்ளி, செவ்வாயுடன் யோகபலமடைகின்றது. தற்போது நடைபெறும் வெள்ளி புத்தி/சனிதெசையில் அமோக வெற்றியுடன் சந்திரிகாவை பிரதமராக்கும். ஐப்பசி வியாழமாற்றம் (11-ம் இடயோகஸ்தானம்) ஜனாதிபதியாக்கும். (சத்யா கட்டுடை) (9112)

**சாரதா**

கோமல் சுவாமிநாதன் பேட்டியுடனும் இலங்கை எழுத்தாளர்களின் ஆக்கங்களுடனும் இலங்கைச் சிறப்பிதழாக இப்பொழுது விற்பனையாகிறது. (9098)

**துளிர்**

தமிழ் நாடு, புதுவையில்

## தேர்தல் செயலகமே முடிவுகளை வெளியிடும்

(கொழும்பு)

அரசாங்க மந்திரிகளாயிருந்தாலும், அவர்களும் சாதாரண வாக்காளர்களாகவே தேர்தல் சட்டத்தில் கருதப்படுவர் என தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா தெரிவித்துள்ளார்.

சண்டே ஐலண்டுக்கு அவர் அளித்த பேட்டியொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தேர்தல் முடிவுகள், கொழும்பு தேர்தல் செயலகத்தாலேயே வெளியிடப்படும், மாவட்ட அளவில் முடிவுகளை செய்தி ஸ்தாபனங்களுக்கு தெரிவிக்க யாருக்கும் அதிகாரமில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள், ரூபவாகினி அல்லது ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்புக்களைத் தொடர்ந்தே முடிவுகளை வெளிப்படுத்தலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள், தேர்தல் விவாதங்களை ஒளிபரப்பியதற்கு தேர்தல் திணைக்களம் உடன்பாடு தரவில்லை எனவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்த 5000 பேர் வரையில் தேர்தலில் வாக்களிக்க விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் 3500 பேர் கொழும்பில் இருந்து விண்ணப்பித்துள்ளரெனவும் அவர் தெரிவித்தார்.

## வாக்காளர் அட்டைகள் கும்பலால் பறிப்பு

(பண்டாரவளை)

பண்டாரவளையிலுள்ள அம்பிட்டிகந்த தோட்டப் பகுதியில் ஆயுதபாணிகளாக புகுந்த இனந்தெரியாத ஒரு குழுவினர், 350 க்கு மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்களிடம் அவர்களது வாக்காளர் அட்டைகளையும், தேசிய அடையாள அட்டைகளையும் பறித்துச் சென்றுள்ளனர். அத்துடன் அவர்கள் வாக்களிப்புக்கு செல்லக் கூடாதெனவும் எச்சரித்துள்ளனர்.

இதுசம்பந்தமாக கிராமிய கைத்தொழிற்துறை அமைச்சர் தொண்டமான், பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு முறைப்பாடு செய்து, நேர்மையான தேர்தல் நடைபெற பாதுகாப்பு வழங்கும்படி கேட்டுள்ளார்.

மேலும், இத்தகைய காடைத்தனங்கள் வேறு தோட்டங்களுக்கும் பரவாமல் பார்த்துக் கொள்ளுமாறும், பிரதிப் பொலிஸ் மா அதிபரைக் கேட்டுள்ளார்.

## கணித, விஞ்ஞான ஆசிரியர் சம்பளம் மீளாய்வு

கனிஷ்ட பல்கலைக் கழகத்தில் பயிற்சி முடித்துள்ள விஞ்ஞான, கணித, மனையியல் ஆசிரியர்களின் சம்பளம் 01-01-93 தொடக்கம் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. இதன்படி இவ் ஆசிரியர்களின் சம்பளத்தை வழங்குமாறு கல்வி கலாசார அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ். ஏ. விஜேசிங்க சகல கோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு சுற்றறிக்கை மூலம் தெரியப்படுத்தி உள்ளார்.

இதுவரை இவர்கள் பெற்று வந்த 25,800—6 × 600/- 9 × 900—37,500 என்ற சம்பள அளவுத் திட்டத்தில் இருந்து, 01-01-93இல் இருந்து 35 640—6 × 780—9 × 1200/- 51120/- என்ற சம்பள அளவுத் திட்டத்திற்கு இது மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

### கண்டெடுப்பு

யாழ் மாநகரசபை அலுவலகத்தின்முன்பாக் உள்ளசந்தியில் கைச்சங்கிலி ஒன்றுகண்டெடுக்கப்பட்டு ஈழநாதம்காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் ஆதாரம் காட்டிப்பெற்றுக் கொள்ளவும்

## ஜனாதிபதிக்கு உதவவே சிசில் திரும்பி வந்தார்

### பப்பாசி செய்கை

முல்லை மாவட்டத்தில் கிட்டு 92 இனப் பப்பாசிச் செய்கையை அதன் தனித்துவம் கெடாது விரிவு படுத்தும் முகமாக 10 ஏக்கர் மாதிரிப் பண்ணையின் ஒரு பகுதியில் பப்பாசிச் செய்கையை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்படும் இந் நடவடிக்கை மூலம் இப் பப்பாசிச் செய்கையை மக்களிடையே பரவச் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

### களஞ்சியம் திறப்பு

முல்லை மாவட்ட விவசாயிகளின் நன்மை கருதித் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விவசாயப் பகுதியினரால் தண்ணீரூற்றுப் பகுதியில் அண்மையில் பசுமை விவசாயக் களஞ்சியம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

இக்களஞ்சியம் திறக்கப்பட்டதன் மூலம் விவசாயிகள் இதுவரை உள்ளீடுகளைப் பெறுவதில் எதிர்நோக்கிய சிரமங்கள் தவிர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அநுரா வந்ததால் சிறிமாவோ வெளியேறினார்

### ஹொரகொல்லவில் சம்பவம்

(கொழும்பு)

பண்டாரநாயக்கா குடும்பத்தினரின் சொந்த இடமான ஹொரகொல்லையில், ஜனாதிபதி டி பி விஜேதுங்காவுக்கு, அநுரா பண்டாரநாயக்கா தேநீர் விருந்தொன்று அண்மையில் அளித்த சமயம் அப்பகுதியில் பிரசாரத்திற்கு வந்திருந்த, அவரது தாயாரும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவியுமான சிறிமாவோ பண்டாரநாயக்கா சடுதியாக ஹொரகொல்லையை விட்டு வெளியேறி விட்டதாக ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

ஹொரகொல்லையை விட்டு புறப்படும்முன் ஹொரகொல்ல அநுராவின் இடம், அவர் விரும்பியதைச் செய்யட்டும் எனக் கூறிச் சென்றதாகவும் ஐலண்ட் தெரிவித்துள்ளது.

### முடிச்சுமாறிகள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கிளாலிப் பகுதியில் முடிச்சுமாறிகளின் தொல்லை அதிகரித்துள்ளது

கடந்த புதன்கிழமை இரவு கிளாலிப் பகுதியில் சி. ஆறுமுகம் என்பவரது பயணப்பை முடிச்சுமாறிகளினால் களவாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இவரது பையிற்குள் தமது தொழில் ஆவணங்கள், கொடுப்பனவு அட்டைகள் மற்றும் பொருட்கள் இருந்ததாகத் தெரிவித்தார். (88)

### பனைவள கண்காட்சி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் நல்லூர் கண்காட்சியின் போது வன்னிப் பிரதேச பனைவள உற்பத்திகளை காட்சிக்கு வைப்பதற்கான ஒழுங்குகளை பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதி மேற்கொண்டு வருகின்றது.

அண்மையில் வன்னிப் பெருநிலப்பரப்பில் நடாத்தப்பட்ட "மாபெரும் பனைவளக் கண்காட்சியில் சிறந்த கைப்பணிப் பொருட்களும், உற்பத்திச் சாலை வடிவமைப்புக்களும் இடம் பெற்றன. வன்னிப்பிரதேச மக்களின் முயற்சித் திறனை வெளிக்காட்டும் வகையில் அமைந்த இக் காட்சிப்பொருட்களை குடாநாட்டு மக்களுக்கு அறிமுகம் செய்யும் பொருட்டும் உற்பத்தியாளர்கள் இதைப்பார்த்துப் பயன்பெறும் வகையிலும் இப் பொருட்களை காட்சிப்படுத்துவதற்கான ஒழுங்குகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

### சுய தொழில் ஊக்குவிப்புக் கடன்

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல வழிகளிலும் செயற்பட்டு வருகின்றது. அந்த வகையில் கெருடாவில் தெற்கு, தொண்டமானாறு தெற்கு ஆகிய பகுதிகளில் 39 பயனாளிகளை

## நினைவு கூருகின்றோம்...

**16-08-1994...**

1988-ம் ஆண்டு இதேதினத்தில் மட்டு-குடியிருப்புப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**மூர்த்தி** (வேதாரணி சத்தியமூர்த்தி-நல்லதம்பியார் வீதி, ஏறாவூர்-மட்டு)

1990-ம் ஆண்டு முள்ளிப்பள்ளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**ராஜன்** (- - திருமலை)

1992-ம் ஆண்டுஊரியானில் சிறிலங்கா இராணுவத்தினரின் திடீர்த்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.ராசன்** (இராமநாதன் பத்மநாதன்- 115-ம் கட்டை - கிளிநொச்சி)

**வெங்கடேஸ்வரன்** (சின்னையா ராமநாதன்- ஊற்றுப்புலம், முறிப்பு-கிளிநொச்சி)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும், சிறிலங்காபடையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில்**

**நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10119)

## 1-ம் ஆண்டு நினைவலைகள்



பள்ளி மாணவரிடையே பெரும் வரவேற்பைப் பெற்று பல இலட்சம் பிரதிகள் விற்பனையாகும் சிறுவர்க்கான அறிவியல் மாத இதழ் இப்பொழுது யூன், யூலை இதழ்கள் எங்கும் விற்பனையாகிறது. (9097)


## வெளிவந்துவிட்டது வியாழன் மாற்றம்

PROF T. சத்தியதாஸன் கணிப்பில்: ஏக விநியோகஸ்தர்கள் ஸ்ரீகாந் புத்தகசாலை- நல்லூர். மக்மிலன் புத்தகசாலை- யாழ்ப்பாணம். இந்தியா ருடே 1994 ஆண்டு மலர் வெளிவந்துவிட்டது. சீவம் நீதிக்கதைகள் 3,4,5,6 ஆண்டு 5 கணிதம், தமிழ் 94 வினா விடைகள். (சி-10101)


## நாய்களுக்கு தடுப்பூசி

(தொல்புரம்)

வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேசத்தினை சேர்ந்த மாசியப்பிட்டிப் பகுதியில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி மருந்து ஏற்றுவதற்கான நடவடிக்கைகளை மானிப்பாய் சுகாதாரப் பிரிவினர் மேற்கொள்ளவுள்ளனர்.

இன்று செவ்வாய் காலை முதல் நண்பகல் வரை நான்கு இடங்களில் வைத்து வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்படும். இதன்பிரகாரம் மாசியப்பிட்டி செட்டி சனசமூக நிலையத்திலும், சண்டிலிப்பாய் அரசினர் பாடசாலையிலும், பொன்னாமுனை சிறுவர் பாடசாலையிலும், ஆலங்குளாய் சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றுதல் இடம் பெறும். இந்த அத்தியாவசிய சேவையை கருத்திற்கொண்டு மக்களை ஒத்துழைக்குமாறுசுகாதாரப் பகுதியினர் கேட்டுள்ளனர். (41)

(கொழும்பு)

தாய்லாந்திற்கான தூதுவராக இருக்கும் முன்னாள் சிறிலங்காஇராணுவத்தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ண பாதுகாப்பு ஒழுங்குகள் குறித்து ஜனாதிபதிக்கு உதவவே கொழும்பு திரும்பியிருப்பதாக சண்டே லீடர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை அரசியல்வாதி ஒருவரை கொல்வதற்காக விடுதலைப்புலிகள்அணிஒன்று தெற்கில் நடமாடுவதாக பாதுகாப்பு புலனாய்வுத் தகவல்கள் கூறுவதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும் அவ்வரசியல் வாதி யார் என்பதை வெளியிட அவர்கள் மறுத்துவிட்டனர் என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

தெரிவு செய்து ஒரு பயனாளிக்கு ரூபா 10,000 வீதம் சுய தொழில் ஊக்குவிப்பு முயற்சிக்கான கடன் அண்மையில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் வைத்து வழங்கப்பட்டது.



செல்வி கதிரமலை ஜெயந்தி

தோற்றம்: 13 - 11 - 1968

மறைவு: 28 - 07 - 1993

ஆண்டு ஒன்று சென்றாலும் உன் நினைவு
எம் நெஞ்சங்களை விட்டகலாது.
தங்கா! தங்க ! என நெஞ்சம் அலைமோதுகின்றதே ..

அச்சுவேலி வடக்கு, என்றும் உன்நினைவலைகளுடன்
அச்சுவேலி. (9108) - குடும்பத்தினர்

# நான் சந்திரிகாவின் அரசில் அமைச்சராக இருப்பேன்

## - திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியில், சந்திரிகாவின் தலைமையில் நான் சிரேஷ்ட அமைச்சராகவும் ஆலோசகராகவும் இருப்பேன் சந்திரிகா நிச்சயம் ஓர் திறன் வாய்ந்த பிரதமராக இருப்பார் என பொது ஜன ஐக்கிய முன்னணியின் தலைவி சிறிமாவோ பண்டார நாயக்கா தெரிவித்துள்ளார்.

சண்டே ஐலண்ட் பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் அவர் இவ்வாறு கூறியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சி, சந்திரிகா தலைமைப் பொறுப்பேற்கும் விடயத்தில் குழப்பத்தை உண்டு பண்ணி மக்களை தவறான வழிக்கு கொண்டு செல்ல முயன்றது எனவும் அவர் குற்றஞ் சாட்டினார்.

ஜனாதிபதி விஜேதுங்கா உங்களை பிரதமராக நியமித்தால் நீங்கள் என்ன செய்வீர்கள் எனக் கேட்டபோது நான் சந்திரிகாவைநியமிக்கும் படியேஅவரிடம்தெரிவிப்பேன் இவ்விடயத்தில் நான் தெளிவாக இருக்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

வடக்கிலும் கிழக்கிலும் இரத்த கறையை ஏற்படுத்தியது ஐ-தே க. அரசே. வடக்கு -கிழக்கை நாட்டிலிருந்து பிரித்ததும் இவர்கள்தான் இன்று ஐ தே. க: வடக்கில் ஆட்சியை நடத்த முடிகிறதா, கிழக்கிலும் பல இடங்களில் இதே நிலைமைதான் வடக்கில் நிர்வாகத்தை புலிகளே நடத்துகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.


## க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான வெளியீடுகள்

சென்மதி நிலுவை
மா. சின்னத்தப்பி விலை 40|-

வர்த்தகமும் நிதியும்
நடைமுறை விடயங்கள் விலை 35/-

தே. ஜெயராமன் (M.BA)

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

வெளியீடு

பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-10116]


## ஊழியர் கலந்துரையாடல்

எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபன சகல ஊழியர்களுக்கும் முக்கியகலந்துரையாடல் ஒன்று நடைபெற இருப்பதால் அக்கலந்துரையாடலில் சகல ஊழியர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி தொழிற்சாலை ஆளணி உத்தியோகத்தர் கேட்டுக் கொள்கின்றார்.

## கண்டெடுப்பு

அன்னலட்சுமி பாக்கிய நாதன், மாரியாய் சந்தனம், சின்னத்தம்பி வதனி ஆகியோரது அடையாள அட்டைகளும் ஒரு தொகுதி வறுமை நிவாரண உணவு முத்திரை அடிக்கட்டைகளும்நாயன்மார் கட்டு இராஜேஸ்வரி அம்மன் கோவில் அருகே கண்டெடுக்கப்பட்ட மூக்கு கண்ணாடி ஒன்றும் எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும்,

# எதிரான வாக்குகள் இணைவினால் தோல்வி

## தென்மாகாண தோல்வி குறித்து ரணில்

தென் மாகாண சபைத் தேர்தலில் நாங்கள்தோற்றதற்கு, அங்குள்ள ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான வாக்குகள் ஒட்டுமொத்தமாக இணைந்ததே காரணம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைத் தக்க வைத்து 21-வது நூற்றாண்டை நோக்கி இலங்கையை, சிங்கப்பூர், தாய்வான் போன்ற தொழில்சார் நாடுகளின் இடத்துக்கு கொண்டு செல்லும் எனவும்அவர்தெரிவித்துள்ளார்


## 15.08.1994-ம் திகதி கடந்து விட்டதே என கவலை கொள்ளாதீர்கள்!

எம் அன்பார்ந்த மாணவர்களே!!
உங்களுக்காகவே..... உங்கள் வசதி கருதி
22-08-1994 வரை நீடிக்கப்பட்டுள்ளது!

"தமிழீழத்தினை தெரிந்து கொள்ளுங்கள்"

வினாவிடைப் போட்டியில் பங்கு கொள்வதற்கான விண்ணப்ப முடிவு திகதி மாணவர்களின் வசதி கருதி 22 - 08 - 1994 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

உட்கட்டுமானப் பகுதி,
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்,
இல: 10, செம்பியன் லேன்,
கொக்குவில்,


தமிழீழத்தை தெரிந்து கொண்டு நீடித்த கால எல்லையினுள் நீங்களும் பிரவேசித்து தெரிந்ததை எழுதி அறிவுடன் கூடவே ஒரு பவுண் தங்கப்பதக்கத்தை உறுதி செய்து கொள்ளுங்கள்

(சி-10121)

Nallur Branch Library

# வர்த்தகம்

# வர்த்தகமும் கணக்கியலும் தேர்வு
# நாடிகட்கான வழிகாட்டல் குறிப்புகள்



# மாணவர் அரங்கு

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் வர்த்தகமும் கணக்கியலும் பாடத்தில் மாணவர்கள் இலகுவாக புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற முறையில் இக்கட்டுரை அமைகின்றது. இப்பாடத்தினை பொறுத்த வகையில் மிகவும் இலகுவாக கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வழிகள்இருந்தும் மாணவர்கள் தமது கவனயீனத்தினாலும் புரியாமையினாலும் குறைவானபுள்ளிகளைப் பெற்றுக்கொள்வதனை அவதானிக்க முடிகின்றது. இம்முறை தோற்றும் மாணவர்கள் பின்வரும் ஆலோசனைகளை தேர்வில் கைக்கொள்வதன் மூலம் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றிட முடியும்.

இனி இவ் வர்த்தகமும் கணக்கியலும் வினாத்தாளினை நோக்குவோமாயின் அது பகுதி I பகுதி II என இரு வினாத்தாள்களைக் கொண்டமைகின்றது.

பகுதி I இனை முதலில் எடுத்துக் கொண்டால் அது 40 வினாக்களைக் கொண்டிருக்கும். இதில் முதல் 20 வினாக்களும் வர்த்தகத்தை உள்ளடக்கியதாகவும் மிகுதி 20 வினாக்களும்கணக்கியலை உள்ளடக்கியும் அமைந்திருப்பதுடன் இவை ஒவ்வொன்றிற்கும் நான்கு விடைகளும் தரப்பட்டிருக்கும் அதில் சரியான விடையினைத் தெரிவு செய்து தரப்பட்டுள்ளவிடைத்தாளில் அதற்குரிய கூட்டினுள் புள்ளடியிடல் வேண்டும். இவ்வினாத்தாளிற்கு விடையளிக்க தரப்பட்டுள்ள நேரம் ஒரு மணித்தியாலம் மட்டுமே. பரீட்சார்த்திகள் ஒரு வினாவிற்கு விடையளிக்க கிடைக்கும் நேரம் $1\frac{1}{2}$ நிமிடங்கள்மட்டுமே. இந்தநேரத்திற்குள் வினாவை முழுமையாகவாசித்து விளங்கி தரப்பட்ட நான்கு விடைகளையும் ஒப்பிட்டு மிகச் சிறந்த விடையைத் தெரிய வேண்டும்.

நேரம் குறுகியதாக இருப்பதால் மாணவர்களின் விவேகம் இங்கு முக்கியஇடத்தினை வகிக்கின்றது. வினாவினை வாசிக்கும்போதே அதற்குரிய விடை அவர்மனதில் உதித்தல் வேண்டும். ஏனெனில் தரப்படும் நான்கு விடைகளும் சரியானவையாகவே தோன்றும். அந் நான்கு விடைகளும் ஏதோ ஒரு வகையில் பொருத்தப்பாடுடையதாகவே தரப்படுவதால் மாணவர்கள் அவசரப்பட்டு விடையளிப்பதை தவிர்த்து முன்னரே மனதில் உதித்த விடையுடன் தரப்பட்ட விடைகளை ஒப்பிட்டு சரியானவிடையினைத்தேர்வு செய்தல் வேண்டும்.

கடந்தகால வினாத்தாள்களை ஒப்புநோக்குமிடத்து வருடா வருடம் ஒரே மாதிரியான வினாக்களே சிறு சிறு மாற்றங்களுடனும் ஒத்த சொற் பிரயோகங்களுடனும் வந்து கொண்டிருப்பதை அவதானிக்கலாம். சில வருட வினாத்தாள்களை எடுத்து மாணவர்கள் ஒப்புநோக்குமிடத்து இவ் ஒற்றுமைகள் தெளிவாகப் புலப்படும். அதன் பின்பு குறிப்பிட்ட பகுதியினை மீட்டல் செய்யும் போது அவற்றிலிருந்துவினாக்கள் எவ் வடிவத்தில் தெரிவு செய்யப்படுகின்றன என்பதையும் தெரிந்து கொள்ளலாம். மேலும் தோற்றப்போகும் பரீட்சையில் குறிப்பிட்ட பகுதிக்குரிய வினா எப்படி அமையும் என்பதைக்கூட மாணவர்கள் ஊகிக்கக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறு மாணவர்கள் தம்மைத் தயார்படுத்தி பரீட்சைக்கு விடையளிக்கும்போது ஏதாவது சந்தேகங்கள் எழும் பட்சத்தில் வினாத்தாளின் குறிப்பிட்ட வினாவின் இடது புறத்தில் ஓர் அடையாளத்தை இட்டபின் அடுத்த வினாவைநோக்கவும் மாறாக அந்த வினாவையே மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ள முற்படும்போது பிற் பகுதியில் வரும் சுலபமான வினாக்களுக்குக் கூட விடையளிக்க முடியாத நிலை ஏற்பட்டு விடும். இவ்வாறு 40 வினாக்களையும் வாசித்து விடையளித்தபின் எஞ்சிய நேரத்தில்முன்னர்அடையாளமிட்ட [விடையளிக்கத்தவறிய] வினாக்களை எடுத்து ஆறுதலாக வாசித்து விடையளிக்கலாம்.

ஏனெனில் முதல் தடவையாக ஆரம்பத்திலிருந்து வினாக்களை வாசித்து கொண்டு செல்லும்போது மாணவர்களை அறியாமலே ஒருவித பதற்றம் தோன்றி விடும். பதற்றத்தால் பிழையானவிடைக்குக்கூட புள்ளடியிட்டு விடுவீர்கள்.

சில வினாக்களுக்குரிய விடைகள் கணிப்பிட்டு எடுக்க வேண்டிய நிலையும் உருவாகும். அவ்வாறு கணித்து பார்க்க வேண்டிய வினாக்களை இறுதியில் எடுத்து விடையளிப்பது சிறந்தது.

இவ்வாறு பகுதி I இற்கு விடையளித்து முடிந்ததும் பரீட்சார்த்திகள் எஞ்சிய நேரத்தில் விடைகளை மீண்டும் ஒருமுறை வாசித்து சரி பார்த்துக் கொள்வது அறியாமல் விட்ட தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கு வழி வகுக்கும்.

இவ் 40 வினாக்களுக்கும் 80 புள்ளிகள் வழங்கப்படுகின்றன. இதன்படி ஒரு வினாவிற்கு சரியான விடை அளிக்கும் பட்சத்தில் 2 புள்ளிகள் வழங்கப்படுகிறது. இதில் வர்த்தகம், கணக்கியல் இரண்டுக்குமே சம புள்ளிகள் வழங்கப்படுகின்றன. எனவே பகுதி I ற்கு மாணவர்கள் அவதானமாக விடையளிக்கும் பட்சத்தில் மிக இலகுவாகவே சித்திப் புள்ளியைப் பெற்றுவிடலாம்.

* * *

பகுதி II இனை எடுத்து நோக்குவோமாயின் அதில் பகுதி I, பகுதி II என இரு பிரிவுகளாக வினாக்கள் அமைந்திருக்கும். இதில் பகுதி I இல் நான்கு வினாக்களும், பகுதி II இல் நான்கு வினாக்களுமாக மொத்தம் எட்டு வினாக்கள் காணப்படும்.

பகுதி I இல் வியாபார இலாப நட்டக் கணக்கு ஐந்தொகை உட்பட மூன்று வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். இதில் மாணவர் தெரிவிற்கென ஒரு வினா மேலதிகமாகத் தரப்பட்டுள்ளது.

## து. சசிகரன்

இதில் முதலாவது கணக்கான முடிவுக்கணக்கு வருடா வருடம் வந்து கொண்டிருப்பதைக் காணலாம். இக்கணக்கிற்கு மட்டும் 30 புள்ளிகள் வழங்கப்படுகின்றன. இதில் ஒவ்வொரு பதிவுகளுக்கும் புள்ளிகள் வழங்கப்படுகின்றன. எனவே பரீட்சார்த்திகள் இக்கணக்கிற்கு பதிலளிப்பதற்காக 45 நிமிடங்களை செலவிடலாம். முதலில் தரப்பட்டுள்ள சீராக்கங்களை வாசித்து அவற்றை பரீட்சை மீதியில் தெளிவாக அடையாளமிட்டுக் கொள்ளவும்.

உ+ம்;- சீராக்கத்தில் 2 வது ஆக அட்டுறு வாடகை 500 எனத் தரப்படின் பரீட்சை மீதியில் வாடகைக்கு பக்கத்தில் 2 எனக் குறிப்பிட்டுக் கொள்ளல்.

இவ்வாறு குறிப்பிட்டுக் கொண்ட பின் தரப்பட்ட விடைத்தாள்களிலே சகல கணக்குகளையும் திறக்கவும். தலையங்கம் ஒவ்வொன்றிற்கும் ஒரு புள்ளி வழங்கப்படுவதால் மாணவர்கள் அதில் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

உ+ம்:- சிவன் நிறுவனத்தின் 93டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்குரிய வியாபார இலாப நட்டக்கணக்கு என எழுதப்பட்டால் இதற்கு 1 புள்ளி வழங்கப்படும்.

இதேபோல் ஒவ்வொரு பதிவுக்கும் $\frac{1}{2}$ புள்ளி வீதம் புள்ளிகள் வழங்கப்படுகின்றன. எனவே மாணவர்கள் முடிவுக் கணக்கு சமப்படவில்லை என கவலை கொள்வதைத் தவிர்த்து தெரிந்தளவிற்கு பதிவுகளைமேற்கொண்டாலேகணிசமான புள்ளிகளைப் பெற்றுவிட முடியும்.

மேலும் கணக்குகளைத் திறந்தவுடன் செலவினங்களைப் பாகுபடுத்தி தலைப்பிடவும். இதில் நிலைய நிர்வாகச் செலவினை சேர்த்துப் பதியலாம். இவ்வாறு ஒவ்வொரு செலவினங்களுக்கும் 7 வரிகள் விட்டுத் தலைப்பிட்டால் போதுமானது.

ஐந்தொகையைப் பொறுத்த வரையில் அதன் தலைப்புக்கும் 1 புள்ளி வழங்கப்படுகிறது. இதன் தலைப்பு பின் வருமாறு அமைந்திருத்தல் வேண்டும்

உ+ம்:- சிவன் வியாபார நிலையத்தின் 1993 டிசம்பர் 31-ல் உள்ளவாறான ஐந்தொகை.

இவ்வாறு சொத்துக்கள் பரிப்புகள் சகலதும் வகைப்படுத்தப்பட்ட பின் மாணவர்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம். இவ்வாறு பாகுபடுத்திய பின் பதிவுகளை மேற்கொள்வதால் பின்வரும் அனுகூலங்களை மாணவர்கள் பெற்றிட முடியும்.

i) நேரம் சிக்கனப்படுத்தப்படும்.

ii) விரைவாகப் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

iii) பிழையின்றி பதிவுகளை மேற்கொள்ளலாம்.

iv) சீராக்கங்களுக்குரிய பதிவுகளை தவறாது பதிந்து கொள்ள முடியும்.

பரீட்சை மீதியிலிருந்து ஒவ்வொரு பதிவுகளையும் பதியத் தொடங்கும்போதே பரீட்சை மீதியில் அவற்றை அடையாளமிடு செல்லவும். சீராக்கம் வரும் சந்தர்ப்பத்தில் அவற்றிற்குரிய இரு பதிவுகளையும் உரிய இடத்தில் ஒரே நேரத்தில் மேற்கொள்ளவும்.

குறிப்பு:- I

1) ஐந்தொகையில் நிலையான சொத்துக்களை கொள்விலை, திரண்டபெறுமானத் தேய்வு, தேறியது என வகைப்படுத்தி குறிப்பிட்டு காட்டுவது சிறந்தது.

2) சீராக்கங்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பதிவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3) சீராக்கங்களை மேற்கொள்ளும் போது கணக்குகளிலேயே கணித்துக்காட்டவும் இதன் போது +, − போன்ற குறியீடுகளை அவற்றின் அருகில் அடைப்பிற்குள் போடவும். உ+ம்:

வாடகை 1000
(+) அட்டுறு 100-1100

இதனை ஐந்தொகையில் நடைமுறைப்பரிப்பாகக் காட்டும் போது அட்டுறு (வாடகை) 100 எனப்பதியவும்.

(iv) நடைமுறைச் சொத்தினை திரவத்தன்மை ஒழுங்கில் பதியவும்.

குறிப்பு II

முடிவுக்கணக்கு சமப்படாதுவிடின் நேரத்தை வீணடிக்காது மற்றைய கணக்குகளை செய்யவும். முடிந்த பின் மீண்டும் இதனை சமப்படுத்த முயலலாம்.

இரண்டாவது கணக்கில் இரண்டு வினாக்கள் அமைந்திருக்கும் இதற்கு 15 புள்ளிகள் வழங்கப்படும். இவை பெரும்பாலும் பரீட்சைமீதி மற்றும் வழுக்களுடன் தொடர்புடைய தொங்கல் கணக்காக அமைந்திருக்கலாம்.

அவ்வாறு அமைந்திருப்பின் முதலாவது வினாவிற்கு நான்கு புள்ளிகள் வழங்கப்படும்.

இரண்டாவது வினா குறிப்பேடாக அமையும். இதில் வழுக்களைத்திருத்தும் போது வரவு, செலவு பதிவுகளுடன் விளம்பலும் எழுதப்படல் வேண்டும் இவற்றிற்கு மூன்று புள்ளிகள் வழங்கப்படும்.

உ+ம்:- உட்திரும்பல் ஏட்டின் கூட்டுத் தொகையான 750 ரூபாய் உட்திரும்பல்கணக்கில் 570 ரூபாயாக பதிவு செய்யப்பட்டது. இவ்வழுவினை திருத்தும் போது.

உட்திரும்பல் கணக்கு வரவு 180
தொங்கல் கணக்கு செலவு 180
(உட்திரும்பல் கணக்கில் 180 ரூபா குறைத்து பதிந்தமைக்கான திருத்தம்)

இவற்றுக்கு ஒவ்வொரு புள்ளியாக மூன்று புள்ளிகள் வழங்கப்படும்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# விஞ்ஞானம்

## கழிவகற்றல்

1. உயிரினங்களின் பொது இயல்புகளில் கழிவகற்றலும் ஒன்றாகும்.
2. கழிவு:- 1. கலங்களின் அனுசேப இயக்கத்தால் உருவாக்கப்பட்ட உடலுக்கு தேவையற்ற

(இ) வடிகட்டப்பட்ட பதார்த்தங்களில் ஓரளவு நீரும் வெல்லமும் மீள உறிஞ்சப்படும் பதார்த்தங்கள் ஆகும்.

(ஈ) வெளிக்காவு புன்னாடியின் மயிர்த்துளைக் குழாய்கள் என்பியின் தடத்தில் வைத்து வெல்லத்தையும் நீரையும் மீள உறிஞ்சுகின்றது.

மாணவர்களின் சிந்தனைக்கு:-
(விஞ்ஞான விளக்கத்திற்குரியவை)

1. கோடைகாலங்களிலும் பார்க்க மாரி காலங்

(ii) அறிமுறை பொறிமுறைநயம்;- எத்தனப்புயத்திற்கும் சுமைப்புயத்திற்கும் உள்ள விகிதம்

$$\text{அறிமுறைப்பொறிமுறை நயம்} = \frac{\text{எத்தனப்புயம்}}{\text{சுமைப்புயம்}}$$

★ அறிமுறைப் பொறிமுறை நயத்திலும் உண்மைப் பொறிமுறை நயம் சற்று குறைவாக காணப்படும். உராய்வு விசையே இதற்கு காரணம்.

★ பொறிமுறைநயத்திற்கு அலகு இல்லை.

6. வேகவிகிதம்:-

1. எத்தனத்தின் இடப்பெயர்ச்சிக்கும் சுமையின் இடப்பெயர்ச்சிக்கும் உள்ள விகிதம்.

★ சுமை ஒரு அலகு இடம்பெயர எத்தனம் எத்தனை அலகு இடம்பெயரும் என்பதைக் குறிக்கும்.

ii. 3-ம் வகை நெம்பில் எப்பொழுதும் சுமைப்புயம் பெரிதாகவும் எத்தனப்புயம் சிறிதாகவும் இருப்பதனால் பொறிமுறைநயம் 1லும் குறைவு.

∴ எனவே பெரிய வேலைகளை 3-ம் வகை நெம்பால் செய்வது கடினம்.

ஒரு சுமையுடன் கையை மடிப்பது கையை நீட்டுவதிலும் கடினம்.

சில்லும் அச்சாணியும்:-

i) ஒரு அச்சில் சுழலக் கூடியதாக ஒரு பெரிய சில்லையும் சிறிய சில்லையும் கொண்ட அமைப்பு ஆகும்.

ii) பெரிய சில்லில் எத்தனமும் சிறிய சில்லில் சுமையும் அமையும்.

1. உயிரினங்களின் பொது இயல்புகளில் கழிவகற்ற லும் ஒன்றாகும்.

2. கழிவு:- 1. கலங்களின் அனுசேப இயக்கத்தால் உருவாக்கப்பட்ட உடலுக்கு தேவையற்ற அல்லது தேவைக்கு மேலதிகமான தீயவிளைவை ஏற்ப டுத்தக் கூடிய பதார்த்தம் கழிவாகும்.

3. விலங்குகளில் தோற்றுவிக்கப்படும் பிரதான கழிவு கள் ஆவன

(i) $CO_2$ (ii) சிறுநீர் (iii) வியர்வை

★ மலம் அனுசேப இயக்கத்தால் தோற்றுவிக்கப் படாமையால் அது ஒரு கழிவு என ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

4. கழிவை அகற்றும் அங்கம் கழிவங்கம் எனப்படும்.

5. எமது உடலில் உள்ள கழிவங்கங்களும் அகற்றும் கழிவுகளும்.

| கழிவங்கம் | | கழிவு |
|---|---|---|
| சுவாசப்பை | — | $CO_2$ |
| தோல் | — | வியர்வை |
| சிறுநீரகம் | — | சிறுநீர் |

6. $CO_2$- கலங்களில் சுவாசம் என்னும் அனுசேப இயக் கத்தால் தோற்றுவிக்கப்பட்டு குருதியால் சுவாச மேற் பரப்பிற்கு கொண்டுவரப்பட்டு அகற்றப்படுகிறது என் பதை சுவாசத்திற்குரிய அலகில் ஆராயப்பட்டுள் ளது.

7. சிறுநீர்

(i) இது ஒரு நைதரசன் கழிவு ஆகும்.

(ii) இதில் யூரியா, யூரிக்கமிலம், கிறியற்றின், கிறியற் றினைன் போன்ற நைதரசன் கழிவுகள் உண்டு

(iii) சிறு நீரில் உள்ள நைதரசன் கழிவுகள் ஈரலில் அமைனகற்றல் என்ற அனுசேப இயக்கத்தால் உருவாக்கப்படுகிறது.

(iv) ஈரலில் இருந்து குருதியால் எடுத்துக் செல்லப்ப ட்டு சிறுநீரகங்களில் நைதரசன் கழிவுகள் வடிக் கப்பட்டு சிறுநீராக வெளி யேற்றப்படுகிறது.

(v) சிறுநீரகத்திற்கு ஈரலில் இருந்து குருதி பின்வரும் பாதைகளினூடாக சென்றடையும்.

ஈரல் —> ஈரல் நாளம் —> பிற்பெரு நாளம் —> வலது சோணைஅறை —> வலதுஇதயவறை —> சுவாசப்பை நாடி —> சுவாசப்பை —> சுவாசப்பை நாளம் —> இடது சோணை அறை —> இடது இதயவறை —> தொகுதிப்பெருநாடி —> சிறுநீரக நாடி —> சிறுநீரகம்

(vi) சிறுநீரகத்தினுள் சிறுநீரகத்தி என்னும் அமை ப்பு உண்டு இதுவே குருதியில் இருந்து நைதர சன் கழிவை வடித்து சிறுநீராக வெளியேற்றுகிறது.

(vii) சிறுநீரகத்தியில் உட்காவு புன்னாடி, கலன் கோளம், போமனின் உறை, வெளிக்காவு புன் னாடி, சிறுநீர் சேர்க்கும் சிறுகுழாய் என்னும் பகுதிகள் காணப்படும்.

(viii) கலன் கோளத்தில் இருந்து போமனின் உறை க்குள் வடிகட்டல் நடைபெறும். இது உயிர்ப் பற்ற அமுக்க வடிகட்டல் என்னும் முறையால் வடிகட் டப்படுகிறது.

(ix) கலன் கோளத்தில உள்ள பதார்த்தங்களில்.

(அ) குருதிக்கலங்களும், புரதமும்வடிகட்டப்படுவதி ல்லை. இவை பெரிய துணிக்கைகளாக காணப்ப டுவதே காரணமாகும்.

(ஆ) நைதரசன் கழிவு, வெல்லம், நீர், மருந்துக் கூறுகள் என்பன வடிகட்டப்படும்.

மாணவர்களின் சிந்தனைக்கு:-

(விஞ்ஞான விளக்கத்திற்குரியவை)

1. கோடைகாலங்களிலும் பார்க்க மாரிகாலங் களில் அடிக்கடி சிறுநீர் கழித்தல்.
2. உப்புநீர் அல்லது உப்பு கூடிய உணவு அருந்தி னால் தாகம் ஏற்படல்.
3. எரியும் நெருப்பின் அருகில் நிற்கும் போது உடல் சிவத்தல்.
4. தரையில் சிறுநீர் கழிக்கும் பொழுது நுரை தோன்றல்.
5. காரமான தரையில் சிறுநீர் சேரும் பொழுது மூக்கை அரிக்கும் மணம் தோன்றல்.

## விடைகள்

1. கோடை காலத்தில் சூழல் வெப்பநிலை கூட எனவே தோலில் உள்ள குருதிக் குழாய்கள் விரிவடைந்து தோலிற்கு கூடியளவு குருதி விநியோ கம் ஏற்படக் கூடிய வியர்வை தோன்றும். ஆனால் மாரிகாலங்களில் சூழல் வெப்பநிலை குறைவாகை யால் வியர்வை தோன்றுவது குறைவாகும் எனவே கழிவுகள் சிறுநீரகங்களால் கூடியளவு வடிக்கப்பட அடிக்கடி சிறுநீர் கழிக்கப்படுகிறது.

2. அதிக உப்பு அருந்தினால் குருதியில் உப்பு கூட மேலதிக உப்பு கழிவு ஆகும் இவ் உப்பு வியர்வை, சிறுநீர் மூலம் அகற்றப்பட கூட நீர் இழக் கப்படுவதனால் உடலில் நீரின் அளவு குறைய தாகம் ஏற்படுகிறது.

3. எரியும் நெருப்பின் அருகில் நிற்கும் போது வெப்பத்தால் தோலில் உள்ள குருதிக்குழாய் விரிய தோலிற்கு அதிக அளவு குருதிச் சுற்றோட்டம் ஏற்பட உடல் சிவக்கிறது,

4. சிறுநீரில் யூரிக்கமிலம் (அமிலம்) காணப்படுவ தனால் அது தரையில் உள்ள காபனேற்றுப் போன்றவற்றுடன் தாக்கம் புரிந்து $CO_2$ வாயுவை தோற்றுவிப்பதால் நுரைக்கிறது.

5. சிறுநீர் ஒரு நைதரசன் கழிவு எனவே காரத் துடன் சேரும் போது $NH_3$ (அமோனியா) தோன்ற மூக்கை அரிக்கும் மணம் தோன்றும்.

## பொறிகள்

1. வேலையை இலகுவாக்கும் சாதனம் பொறி யாகும்.
2. எளியபொறி, சிக்கலான பொறி என இரு வகையான பொறிகள் உண்டு.
3. எளியபொறிகள் ஆறு வகைப்படும். அவையா வன.

(i) நெம்பு கோல் (ii) சில்லும்அச்சாணியும்
(iii) சாய்தளம் (iv) கப்பி
(v) ஆப்பு (vi) திருகாணி

4. பல எளிய பொறிகளின் தொகுதியே சிக்கலான பொறியாகும்.

உ+ம் i துவிச்சக்கரவண்டி ii தையல் இயந்திரம்

5. (i) பொறிமுறை நயம்:- ஒரு பொறியில் உள்ள சுமைக்கும் எத்தனத்திற்கும் உள்ள விகிதம்

$$\text{பொறிமுறைநயம்} = \frac{\text{சுமை}}{\text{எத்தனம்}}$$ (உண்மைப் பொறிமுறைநயம்)

...யின் இடப்பெயர்ச்சிக்கும் உள்ள விகிதம்.

★ சுமை ஒரு அலகு இடம்பெயர எத்தனம் எத் தனை அலகு இடம்பெயரும் என்பதைக் குறிக் கும்.

$$\text{வேகவிகிதம்} = \frac{\text{எத்தனத்தின் இடப்பெயர்ச்சி}}{\text{சுமையின் இடப்பெயர்ச்சி}}$$

வேக விகிதம் அறிமுறைப் பொறிமுறை நயத் திற்குச் சமன்.

திறன்

பொறி செய்த பயனுள்ள வேலைக்கும் பொறி க்கு ஊட்டிய வேலைக்கும் உள்ள விகிதம்.

திறனுக்கான தொடர்புகள்

i) $\text{திறன்} = \frac{\text{பொறி செய்த பயனுள்ள வேலை}}{\text{பொறிக்கு ஊட்டிய வேலை}}$

ii) $\text{திறன்} = \frac{\text{சுமை செய்த வேலை}}{\text{எத்தனம் செய்த வேலை}}$

(வேலை = விசை × விசையின் இடப்பெயர்ச்சி

iii) $\text{திறன்} = \frac{\text{சுமை} \times \text{சுமையின் இடப்பெயர்ச்சி}}{\text{எத்தனம்} \times \text{எத்தனத்தின் இடப்பெயர்ச்சி}}$

iv) $\text{திறன்} = \text{பொறிமுறை நயம்} \times \frac{1}{\text{வேகவிகிதம்}}$

v) $\text{திறன்} = \frac{\text{பொ. மு. நயம்}}{\text{வேக விகிதம்}} \times 100$

நெம்பு

i) ஒரு விசையால் ஏற்பட்ட திருப்பத்தை வேறொரு விசையைக் கொண்டு சமப்படுத்தும் சாதனம் நெம்பாகும்.

ii) நெம்பு மூன்று வகைப்படும்.
- i) 1-ம் வகை நெம்பு — (சுழலிடம் நடுவில்)
- ii) 2-ம் ,, ,, — (சுமை நடுவில்)
- iii) 3-ம் ,, ,, — (எத்தனம் ,, )

iii) 1-ம் வகை நெம்பு

1) துலா, தராசு, கத்திரிக்கோல், கல்லுப் பிரட் டும் பாரை, முன் கையை நீட்டல்

1-ம் வகை நெம்பின் பொறிமுறை நயம்

1) சுமைப்புயம் = எத்தனப்புயமாக அமையும் போது பொறிமுறைநயம் = 1
2) ,, < எத்தனப்புயமாக அமையும் போது பொறிமுறைநயம் = 1 லும் கூட.
3) ,, > எத்தனப்புயமாக அமையும் போது பொறிமுறைநயம் = 1 லும் குறைவு

2-ம் வகை நெம்பு

உ+ம் பாக்குவெட்டி, ஒற்றைச்சில்லுதள்ளுவண்டி, நுனிவிரலில் நிற்றல்

குறிப்பு:- 2-ம் வகை நெம்பில் எப்பொழுதும் சுமைப் புயத்திலும் எத்தனப்புயம் பெரிதாகை யால் பொறிமுறைநயம் 1 லும் கூடவாகும்.

3-ம் வகை நெம்பு

i உ+ம் சாவணம் (தணலிடுக்கி), தும்புத்தடியால் கூட்டல், தூண்டில், முன்கையை மடித்தல்

ஆகும்.

ii) பெரிய சில்லில் எத்தனமும் சிறிய சில்லில் சுமையும் அமையும்.

iii) விளச்குதிரிதூண்டி, சைக்கிள் கான்ரில், திறப்பு திருகுசெலுத்தி, திருகுவலை (மேசையில் வைத்து திருவுவது) போன்றவை சில்லும் அச் சாணியும் அமைப்பில் இயங்குவனவாகும்.

iv) பெரிய சில்லின் ஆரை = எத்தனப்புயம்
சிறிய சில்லின் ஆரை = சுமைப்புயம்
∴ அறிமுறைப் பொறிமுறை நயம் / வேக

$$\text{விகிதம்} = \frac{\text{பெரிய சில்லின் ஆரை}}{\text{சிறிய சில்லின் ஆரை}}$$


v) பெரிய சில்லின் ஆரையை கூட்டி அல்லது உரா ய்வைக் குறைத்து பொறிமுறை நயத்தைக் கூட்டலாம்.

**சு. அருள்நேசன்**

சாய்தளம்:-.

i) உயரமான இடத்திற்கு சுமைகளை கொண்டு செல்லும் சாய்வான பலகை சாய்தளம்.

ii) சாய்தள அமைப்பில் இயங்குபவை
i] மாடிப்படி ii] திருகாணியில் உள்ள புரி
iii] லொறிகளில்பீப்பாக்களை ஏற்றும்பலகை




AC — சாய்தளம்

இதன் அறிமுறைப் பொறிமுறை நயம் $= \frac{AC}{AB}$

அதாவது $\frac{1}{\sin\theta}$ ஆல் பெறப்படும்.

சாய்தளத்தில் பின்வரும் நடவடிக்கைகள் மூலம் பொறிமுறை நயத்தைக் கூட்டலாம்.

i) சாய்தளத்தை அழுத்தமாக்கல் [உராய்வைக் குறைத்தல்]

ii) சாய்வுக் கோணம் (θ) வைக் குறைத்தல்

## பதவிக்கு வந்ததும் இந்தியாவுடன் நல்லுறவு

(கொழும்பு)

பொதுத்தேர்தலில்வெற்றியீட்டி பதவிக்கு வந்ததும், இந்தியாவுடன் நல்லுறவுதொடர்ந்து பேணப்படும் என்று பொது ஜன ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவரும், மேல் மாகாண முதல்வருமான திருமதி சந்திரிகா குமாரணதுங்கா கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியளர்களிடம் பேசிய அவர் மேலும்கூறுகையில்விடுதலைப் புலிகளுடனும், அவர்களையொத்தமற்றைய இளைஞர்களுடனும் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு இனப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காணப்படும் எனவும் தெரிவித்தார்.

இதே வேளை வாக்குப் பெட்டிகள் கொண்டு வந்து சேர்க்கப்படுவதற்கு முன்பாக ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்தால் வீதிகள் வெறிச் சோடி ஆட்கள் நடமாட்ட மற்று இருக்கும் சூழலில் வாக்குப் பெட்டிகளுக்கு எதுவும் நேரிடலாம் என்று பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கூறியுள்ளார். தேர்தலில் தில்லுமுல்லு செய்வதற்கான சூழலை அரசு உருவாக்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கு நியாயமான உரிமைகள் முன் வைக்கப்பட்டால் பிரபாகரன் பேச்சுவார்த்தைக்கு இணங்குவதைத் தவிர வேறு வழியிருக்காது என்று தெரிவித்த திருமதி சந்திரிகா குமாரணதுங்க ! இப்பேச்சுவார்த்தைகள் எங்கே எப்போது நடக்க வேண்டும் என்பது பின்னர் முடிவு செய்யப்பட வேண்டிய விடயம் ஆகும் எனத் தெரிவித்தார்.

# சண்டேரைம்ஸ் கருத்துக்கணிப்பு ஐ. தே. க. முன்னணியில்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு தவிர்ந்த ஏனைய 17 மாவட்டங்களில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் ஐ. தே க 39.4 சதவீத வாக்குகளையும் பொது ஜன ஐக்கியமுன்னணி 33 9 சதவீத வாக்குகளையும் பெற்றுள்ளன. இதனால் இரு கட்சிகளிடையே மிக நெருங்கிய போட்டி உண்டு என சண்டேரைம்ஸ் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது. இக்கணிப்பில் 7சதவீதமானோர் கருத்துக்கூற மறுத்துள்ளனர்.

25 வயதுக்குட்பட்டவர்களிடையே எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பில் 38. 5சதவீதமானோர் ஐ. தே. கவையும் 36.6 சதவீதமானோர்பொ, ஐ. முயையும் ஆதரிக்கின்றனர். 4 2 சதவீதமானோர் பதில் கூற மறுத்துவிட்டனர்.

25 வயதுக்கு மேற்பட்டோரிடையே நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் 39 5 சதவீதமானோர் ஐ. தே கவையும் 33. 4 சதவீதமானோர் பொ. ஐ முயையும் ஆதரித்துள்ளனர். 7.8 சதவீதமானோர் கருத்துக் கூறவில்லை.

ஆண்வாக்காளர்களில் 38. 2 சதவீதத்தினர் ஐ தே கவையும் 36. 9சதவீதத்தினர் பொ. ஐ. முவையும் ஆதரித்துள்ளனர். பெண்வாக்காளர்களில் 40. 5 சதவீதமானோர் ஐ தே. கவையும் 31 வீதமானோர் பொ. ஐ. முயையும் ஆதரிக்கின்றனர்.

நகரப்பகுதி மக்களில் 35. 4 சதவீதமானோர் ஐ. தே, கவையும் 30. 2 சதவீதமானோர் பொ, ஐ. முயையும் ஆதரிக்கின்றனர். கிராமபுற மக்களில் 38 4 சதவீதமானோர் ஐ தே. கவையும் 37 1 சதவீதமானோர் பொ. ஐ முயையும் ஆதரிக்கின்றனர். தோட்டப்பகுதி மக்களில் 61. 3 சதவீதமானோர் ஐ தே கவையும் 18 சதவீதமானோர் பொ ஐ. முயையும் ஆதரிக்கின்றனர் என சண்டே ரைம்ஸ் அதன் கணிப்பில் குறிப்பிட்டுள்ளது.

## பனையால் வீழ்ந்து காயம்

(யாழ்ப்பாணம்)

ஓலை வெட்டுவதற்காக பனை மரத்தில் ஏறியவர் சறுக்குண்டு கீழே விழுந்ததனால் படுகாயம் அடைந்துள்ளார். சென்ற வெள்ளிக்கிழமை சுன்னாகம் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் தீவகம்-நாரந்தனையைச் சேர்ந்த செ. அருள்சிலன் (வயது-29)என்ற இளம் குடும்பஸ்தரே படுகாயம் அடைந்தவர் ஆவார். இவர் தற்போது யாழ்-போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

(22)

## வேட்பாளரைக்கைது செய்ய விடாதுபொதுமக்கள் தடுப்பு

(கொழும்பு)

பதுளை மாவட்ட பொது ஜன ஐக்கிய முன்னணி வேட்பாளரை கைது செய்ய முற்பட்ட பொலிசார் பொது மக்களின் கடுமையான எதிர்ப்பினால் அவரை கைது செய்ய முடியாது முயற்சியை கைவிட்டனர்.

பொது ஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் எஸ் ஏ. ஆர். மத்தும பண்டாரவை ஐ. தே. கவின் இராஜாங்க அமைச்சர் ரவீந்திர சமரவீர கொடுத்த பொய் புகாரைத் தொடர்ந்துபொலிசார் கைது செய்ய முயன்றதாகவும் இவரின் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட ஆதரவாளர்கள திரண்டு இவரை கைது செய்யவிடாது தடுத்ததாகவும் பொலிசார் மேற்கொண்டுளதுவும் செய்ய முடியாது பின்வாங்கியதாகவும் தற்போது அவ் உறுப்பினர் பொதுமக்கள் பாதுகாப்பில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# அதிக ஆசனங்களை பொ. ஐ. மு. கைப்பற்றும்

### சண்டே ஐலண்ட் கணிப்பு முடிவு

(கொழும்பு)

இன்று நடைபெறும் பொதுத் தேர்தலில், பெருமளவு வாக்காளர்களின் தெளிவான நிலைப்பாடு அறியமுடியாமல் இருப்பதாகவும், எப்படியிருப்பினும் புதிய அரசு ஒன்றுக்கே அவர்களின் ஆதரவு இருக்கலாம் எனவும் ஐலண்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

93 ல் இடம்பெற்றமாகாண சபைத் தேர்தல்களில் வாக்களிப்பு வீதத்தை விட இம்முறை அதிகமான வாக்களிப்பு வீதம் இருக்கும் எனவும் அது தெரிவித்துள்ளது.

வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய 7 மாகாணங்களிலும் 165 இடங்களில், பொது ஜன ஐக்கிய முன்னணி 92ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 68 ஆசனங்களையும் ஏனையவை 5 ஆசனங்களையும் கைப்பற்றலாமென ஐலண்ட் மேலும் தெரிவித்துள்ளது.

பொது ஜன ஐக்கிய முன்னணி வடக்கு கிழக்கிலுள்ள 31 பாராளுமன்ற இடங்கள் 12 ஐயும், தேசியப்பட்டியலில 16 இடங்களையும் வெல்ல முடியும் எனக் கருதுகிறது.

மொத்தமாக 120 இடங்களைத்தானும் கைப்பற்றுமென முன்னணி எதிர்பார்ப்பதாகவும் சூறிப்பிட்டுள்ளது.

ஆயினும், பல மாவட்டங்களில், பாரம்பரிய ஆதரவுத்தளம் ஒன்று ஐ தே கவுக்கு இருப்பதையும் ஐலண்ட் குறிப்பிட்டுள்ளது.

## சந்திரிகாவின் கூற்றுக்கு பிரதமர் ரணில் மறுப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் பொது ஜன ஐக்கியமுன்னணி வெற்றி பெற்றால் ஐ.தே க ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கமாட்டாதுஎன பொது ஜன ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவியும், மேல் மாகாண முதல்வருமான திருமதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளை ஐ. தே. கவின் சார்பில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க வன்மையாக மறுத்துள்ளார்,

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசிய அவர் மேலும் கூறுகையில் 1956-ல் 1960-ல் 1970-ல் என்று ஐ. தே. க. தோல்வியடைந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்சிப் பொறுப்பை வெற்றி பெற்றவர்களுக்கு கண்ணியமாக ஒப்படைப்பதில் ஐ தே. க பின் நிற்கவில்லை எனத் தெரிவித்தார். எனினும் தேர்தலில் ஐ. தே. க. அமோக வெற்றியீட்டும் என்று நம்பிக்கை தெரிவித்த அவர், தேர்தலில் வெற்றி பெற்றதும் அமைதியை நிலைநாட்டுவதே முதற்பணியாக இருக்கும் எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் நாட்டின் இனப்

# பொலநறுவையில் பொலிசார் மீது தாக்குதல்

### ஆயுதங்களும் பறிப்பு

(கொழும்பு)

கடந்த செவ்வாயன்று பொலநறுவை, ஹிங்குராங்கொட பகுதியில், கடமையிலிருந்த இரு பொலிசார் தக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களின் ஆயுதங்கள் இனந்தெரியாதவர்களால் பறிக்கப்பட்டதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

படுகாயமடைந்த நிலையில் பொலிஸ் ஒருவர் பொலநறுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக விசேட குழு ஒன்று விசாரணையில் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## மக்கள் எதிர்பார்ப்பை உணர்ந்து செயல்படுகிறோம்

### காவல்துறை பொறுப்பாளர் நடேசன்

## 90-ம் நாள் நினைவஞ்சலி



## வர்த்தகம்

தொங்கல் கணக்கு தயாரிக்கும்படி கேட்கப்பட்டிருப்பின் அதற்கும் பதிவிற்கு ½ புள்ளி வீதம் வழங்கப்படும்.

குறிப்பு;-

தொங்கல் கணக்கிற்கு அடிப்படையாக அமைவது இரட்டைப் பதிவு ஆகும். இரட்டைப் பதிவினை விளங்கிக் கொண்ட எந்தவொரு மாணவனும் இக்கணக்கிற்கான புள்ளியை இலகுவாகப் பெற்றுவிட முடியும். இதற்கு மீதிகளும் சரியாகத் தெரிந்திருத்தல் வேண்டும்.

மாணவர்களுக்கு சிக்கலை ஏற்படுத்தும் சில இரட்டைப் பதிவுகள் தரப்படுகிறது. கணக்கியலை செய்வதற்கு இது உறுதுணையாக அமையும்.

கொடுத்த கழிவு

கொடுத்த கழிவு கணக்கு — வரவு

கடன்பட்டோர் க/கு — செலவு

பெற்ற கழிவு

க. கொடுத்தோர் க/கு — வரவு

பெற்றகழிவு க/கு செலவு

உட்திரும்பல்

உட்திரும்பல் க/கு வரவு

க பட்டோர் க/கு — செலவு

வெளித்திரும்பல்

க கொடுத்தோர் க/கு — வரவு

வெ. திரும்பல் க/கு — செலவு

மூன்றாம் நான்காம்வினாக்களும் கணக்கியலுடன் தொடர்புடையவையாகும். இவற்றில் மூன்றாம் வினாவில் ii வினாக்கள் அமையும். இவற்றுக்கும் பதிவுகளின் அடிப்ப

iii) வாடிக்கையாளனிடம் வங்கி அறவிட்டவை
உ+ம்: வங்கிக்கூலிவங்கித்தரகு

iv) நிலையான கட்டளைக்கிணங்க வங்கி செலுத்தியவை
உ+ம்: வாடகை காப்புறுதி

v) காசேட்டின் வரவுப் பக்கம் கூட்டிக் காட்டப்படல் / செலவுப் . பக்கம் குறைத்துக் காட்டப்படல்

★ மாறாக வங்கிக் கூற்று மீதி தரப்பட்டு காசேட்டு மீதி கேட்கப்பட்டால் மாற்றப்படாத காசோலை, நேரடிச் செலுத்துகை, வாடிக்கையாளன் சார்பில் வங்கி அறவிட்டவை, காசேட்டு வரவு பக்கம் குறைத்து காட்டப்படல் / காசேட்டு செலவு பக்கம் கூட்டிக்காட்டப்படல் ஆகியன கழிக்கப்பட்டு ஏனையவை கூட்டப்படல் வேண்டும்.

(அதாவது முதலாவது முறைக்கு எதிராக பதிவுகள் அமையும்.)

★ இதேபோல் காசேட்டைத் திருத்தி வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கும்படி கேட்கப்பட்டால் அறவிட்டுப் பதியாத காசோலைகள் (வசூலிக்கப்படாதவை) மாற்றப்படாத காசோலைகள், வங்கிவிடும் தவறுகள் மட்டும் வங்கி இணக்கக்கூற்றில் காட்டப்படல் வேண்டும். ஏனையவை திருத்திய காசேட்டில் பதியப்படல் வேண்டும்.

★ காசேட்டின் படி வங்கி மேலதிகப் பற்று (பாதக மீதி) தரப்பட்டு வங்கி கூற்று மீதி கேட்கப்படின் வங்கிக் கூற்று மீதி தரப்பட்டு காசேட்டு மீதி கேட்கப்பட்டதைப் போன்று பதிவுகள் அமையும்.

வருமானச் செலவுக் கணக்



## கடற்புலி கப்டன் புரலவன்/குகா

(செல்வரத்தினம் முருகமூர்த்தி)

பிறப்பு 23. 12. 1974 — வீரச்சாவு 19. 05. 1994

தாயகமோ வேதனையில் தான் தவிக்கும் வேளையிலே
சேர்ந்து கொண்டான் பிரபாகரன் சேனையிலே
சிங்களத்துப் படைகளுடன் போராடும் நேரமதில்
செந்தமிழன் சொந்தக்கடல் செங்குருதி ஆனதென்று-
மீண்டும்
சேர்ந்து கொண்டான் கடற்புலிகள் சேனையிலே
பொங்கி எழும் கடலலையில் போர்ப் பயிற்சி
கற்கையிலே
சிங்களத்துப் படைகளுடன் போராடிச் சென்றவனே
அழிந்தது உடலொழிய உன் உறுதி எம்முடனே
கலந்ததடா
உன் உறுதியுடன் தொடர்ந்திடுவோம் தொடர்ந்திடு
வோம் உனது வழி......

16. 8. 94 இன்று எமதில்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் சக போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

சுப்பர் மடம்,
பருத்தித்துறை.

- குடும்பத்தினர்.
(9096)

அத்துடன் நாட்டின் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் அரசு உறுதியாக இருக்கும் எனவும் பேச்சுவார்த்தைக்கான கதவுகள் எப்போதும் திறந்து இருக்கும் எனவும் குறிப்பிட்டார்.

பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சி வெற்றி பெற்றால் இதே போன்று ஆட்சி நடக்க முடியுமா என வினவப்பட்ட போது, இதே நிலைமையில் வெற்றிகரமாக பிரான்சில் ஆட்சி நடப்பதை சுட்டிக்காட்டினார்-

## காவல்துறை பொறுப்பாளர் நடேசன்

(கொழும்பு)

விடுதலை போராட்டத்தில் நம்பிக்கை கொண்ட மக்களின் எதிர்பார்ப்புக்களை நிவர்த்தி செய்வதே தமிழீழக் காவல்துறை என தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் தெரிவித்துள்ளார்.

லண்டன் பி.பி.சி சிங்கள சேவையான சந்தேசியாவுக்கு அளித்த போட்டியில் இக்கருத்தை அவர் தெரிவித்துள்ளார். மக்களின் எதிர்பார்ப்புகள் என்ன என்பதை நன்கு உணர்ந்து அதன்படி செயலாற்றுவதே எமது முக்கிய நோக்கம் என தெரிவித்தார்.

இதற்கு அமையவே காவல் துறைவடிவமைக்கப்பட்டதாகவும் சிங்கள பொலிஸ் செய்த சம்பவங்கள் பொதுமக்களுக்கு நன்கு தெரியும் எனவே நாம் இதில் இருந்து முற்றாக வேறுபட்ட வடிவிலே எமது கடமையைச்செய்கின்றோம் அத்துடன் யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும்பல பொலிஸ்நிலையங்கள் அமைக்கப்பட்டதாகவும் எதிர்காலத்தில் வன்னி மன்னார் பகுதியில் ஓர் காவல் துறை அமைக்கதிட்டமிட்டுள்ளதாக அவர் அப்பேட்டியில் தெரிவித்தார்.

## காமினி விஜயசேகராவிடம் வயோதிபர் அளித்த கோப்பு

(கொழும்பு)

காலிக்கு தாம் அண்மையில் விஜயம் செய்த போது தன்னைச்சந்தித்த வயோதிபர் ஒருவர் 1970-77 ஆம் ஆண்டு கால கோப்புகள் சிலவற்றை தம்மிடம் தந்ததாக ஐ.தே.க பொதுச் செயலர் காமினி விஜயசேகரா கூறியுள்ளார்.

இந்த கோப்புகளில் அப்போது கூட்டுறவுக் கடையில் பாண் வாங்குவதற்கான அட்டை, நாட்டில் அரிசி கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம், நாட்டை விட்டு வெளியேறும் ஒருவர் அரிசிக் கூப்பனை கையளித்து விட்டமைக்கு அடையாளமாக பாஸ்போட்டில் முத்திரை குத்தப்பட்டிருந்தமை என்பவை காணப்பட்டதாக காமினி விஜயசேகரா குறிப்பிட்டார்.

திருமதி பண்டாரநாயக்கா அரசு வாரத்தில் செவ்வாய், வெள்ளி தினங்களிலேயே சோறு உண்ண அனுமதித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## காரைநகரில் வீடுகள் படையினரால் தகர்ப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் நிலைகொண்டுள்ள சிறிலங்காப் படையினர் அங்குள்ள வீடுகளை குண்டுவைத்து தகர்த்து வருவதாக தெரிய வருகின்றது.

காரை நகரில் சிறிலங்கா இராணுவத்தினரின் பிடியில் சிக்கியுள்ளவர்கள் தமது உறவினர்களுக்கு அண்மையில் எழுதிய கடிதமொன்றில் தமது உறவினர்களுக்கு இந்நிலைமையை எழுதியுள்ளனர்.

சிலர் கொழும்பில் இருந்து காரை நகரிற்கு புறப்பட்டுச் சென்றவர்கள் தமது வீட்டைப்பார்க்கச் சென்ற சமயம் அங்கு தமது வீடுகள் உடைக்கப்பட்டு வீட்டின் குசினிகளே எஞ்சியிருந்ததைக் கண்டு அதிர்ந்து போயினர்

(பா)

## கைகலப்புகள் தீவிரம்

கல்முனை குடிப் பகுதியில் கடந்த புதன் இரவு முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரின் வான் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்தார். கூட்டம் கலைந்து வான் ஒன்றில் திரும்பிய இவர்களது வான் டயர் சுடப்பட்டது. இதையடுத்து இவர்கள் கீழ் இறங்க முற்படுகையில் துப்பாக்கிச் சூடு மீண்டும் நடத்தப்பட்டது.

இதில் முன்னாள் எம். பி ஒருவரின் மகனான அபார் அகமட் காயமடைந்தார். ஒரே சமயம் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர் ஒருவரும் நிந்தாவூரில் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தார். மீராவோடையில் முஸ்லிம் பகுதியில் இரு கட்சிகளின் ஆதரவாளரிடையே நடந்த கை கலப்பில் ஒருவர் கத்திக்குத்திற்குஇலக்கானார் ஐ. தே. க. -முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களிடையிலான கைகலப்பு பல இடங்களிலும் பரவி வருகிறது.

வினாக்கள் அமையும். இவற்றுக்கும் பதிவுகளின் அடிப்படையில் மொத்தம் 15 புள்ளிகள் வழங்கப்படும். நான்காவது வினாவிற்கும் 15 புள்ளிகள் வழங்கப்படும். இதில் உற்பத்திக்கணக்கு அல்லது வங்கி இணக்கக்கூற்று. வருமானச் செலவு கணக்கு போன்றன இடம்பெறும் இவற்றுக்கும் மொத்தம் 15 புள்ளிகள் வழங்கப்படும்.

இதில் உற்பத்திக் கணக்கினைப் பொறுத்த வரையில் தலையங்கம், நுகரப்பட்ட மூலப் பொருள் கிரயம், முதற்கிரயம் (உற்பத்தி மூலச்செலவு), ஆலை மேந்தலைச்செலவு (தொழிற்சாலை செலவு), ஆக்கிய பொருட் செலவு ஆகியனவற்றுக்கும் புள்ளிகள் வழங்கப்படும்.

வங்கி இணக்கக் கூற்றினை பொறுத்தவரையில் பதிவுகளுக்கே புள்ளிகள் வழங்கப்படும். மாணவர்கள் பின்வரும் தகவலை கருத்தில் கொள்வதன் மூலம் இலகுவாகப் புள்ளிகளைப் பெற்றிட முடியும்.

காசேட்டின்படி வங்கிமீதி தரப்பட்டு வங்கிக் கூற்றுமீதி கேட்கப்பட்டால் பதிவுகள் பின்வருமாறு அமையும்.

கூட்டப்பட வேண்டியவை
i) மாற்றப்படாத காசோலை
ii) வாடிக்கையாளன் சார்பில் வங்கி அறவிட்டவை
உ+ம் பங்குலாபம், முதலீட்டு வருமானம்
iii) காசேட்டின் வரவு பக்கம் குறைத்துக் காட்டல் / செலவு பக்கம் கூட்டிக் காட்டல்
iv) நேரடி வைப்பு

கழிக்கப்பட வேண்டியவை
i) காசெயப் பெறாத காசோலை
ii) மறுக்கப்பட்ட காசோலை

போன்று பதிவுகள் அமையும்.

வருமானச் செலவுக் கணக்கினைப் பொறுத்த வரையில் கேட்கப்படும் பொதுவான கேள்விகட்கும் கணக்கிற்கும் சேர்த்து 15 புள்ளிகள் வழங்கப்படும். வருமானச் செலவுக் கணக்கின் இடது புறத்தில் நட்டங்கள் செலவினங்களும் வலது புறத்தில் வருமானங்களும் பதியப்படும். இறுதியில் வருமானத்திலும் கூடிய செலவினம் அல்லது வருமானத்திலும் குறைந்த செலவினம் அறியப்படும். இவற்றுக்கும் பதிவுகள் ஒவ்வொன்றிற்கும் புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி ii இல் 5-ம் வினாவில் மொத்தம் 15 வினாக்கள் இடம் பெறும் இவை ஒவ்வொன்றிற்கும் தலா 2 வீதம் 30 புள்ளிகள் வழங்கப்படும்.

பொதுவாக வர்த்தகத்தினை உள்ளடக்கி அமையும் இவ் வினாக்களுக்கு விடை அளிக்கையில் மாணவர்கள் மிகவும் சுருக்கமாக விடையளிக்கலாம். நேரடியாகவே கேட்கப்படும் கேள்விகளுக்கு விடையளித்தால் போதுமானதாகும்.

6-ம் 7-ம் 8-ம் வினாக்களில் கேட்கப்படும் கேள்விகளுக்கு கருத்து உள்ளடக்கப்படும் விதத்தில் விடைகள் அமைந்திருத்தல் வேண்டும். இவற்றுக்கும் மாணவர்கள் கூடுதலாக எழுத வேண்டும் என எண்ணாது நேரடியாக சுருக்கமாக விடையளித்தல் சிறந்தது. இவை ஒவ்வொன்றிற்கும் 15 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

மொத்தத்தில் மாணவர்கள் மேற் கூறப்பட்ட விடயங்களை கருத்தில் கொண்டு பரீட்சையில் வினாக்களுக்கு விடையளிப்பதன் மூலம் சிறந்த பெறுபேற்றை இலகுவாக பெறமுடியும்.

Nallur Branch Library

## சிந்தனைக்கு..

என்கட்சி ஆணைப்படி நான் வாக்கு செலுத்தினேன் சொந்தமாய் சிந்திப்பது பற்றி நான் சிந்தித்ததே இல்லை.

- சேர் வில்லியம் எல் கில்பெட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 16-08-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

# பொதுத்தேர்தலும் தமிழரும்

சிறிலங்காவின் 10-வது பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தல் வாக்களிப்பு இன்று நடைபெறுகிறது. இதைத் தொடர்ந்து தேர்தல் முடிவுகளும் ஓரிரு தினங்களில் வெளிவந்து விடும்என்றேஎதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தவகையில் இத் தேர்தலில் யார் வெற்றி பெறுவார்கள் என்பது பற்றி அறியப் பலர் ஆவலாகவுள்ளது எதிர்பார்க்கக்கூடியதே அதேவேளை இத் தேர்தல் முடிவுகள் எவ்வாறு அமையும் என்பது பற்றி பல கருத்துக் கணிப்புக்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

பொதுவாகவே கருத்துக் கணிப்புக்கள் தேர்தல் முடிவுகளைத் துல்லியமாகக் கூறிவிடக் கூடியவையல்ல. ஆனாலும் சிலசமயம் ஓரளவேனும் சரியாகக் கூறும் கருத்துக் கணிப்புக்கள், அநேகமான சமயங்களில் மாறான நிலையையும் பிரதிபலிப்பதுண்டு. இவ்வாறு கருத்துக் கணிப்புக்கள் தவறாக அமைவதற்கு எடுக்கப்படும் தரவுகளின் பரம்பல்களிலும், வகைகளிலும் தவறுகள் இருப்பது மட்டுமல்ல, கருத்துக்கணிப்புச் செய்பவர்களினதும் அபிலாசைகள், விருப்பங்கள் என்பனவும் கருத்துக் கணிப்புக்களைப் பாதிப்பதுண்டு.

இந்தவகையில், சிறிலங்காவின் பொதுத்தேர்தல்பற்றிய அநேக கொழும்பு ஆங்கில பத்திரிகைகளின் கருத்துக் கணிப்புக்கள் ஐக்கிய தேசியக்கட்சியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும், அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளத் தவறும் என்பதோடு அவை சமபலமான நிலையைப்பெற்றுக் கொள்ளும் என்பதாகவே உள்ளன.

இந்த நிலையில், பொதுத்தேர்தலின் முடிவுகள் குறித்து நாமும் ஆரூடம் எதையும் திட்டவட்டமாகக் கூறமுடியாதது மட்டுமல்ல, அது நமக்குத் தேவையான தொன்றும் அல்ல. ஏனெனில், சிறிலங்கா தேர்தலானது தமிழ் மக்களைப் பொறுத்து ஒரு பயன்பாடு அற்ற

# மாகாண சபைக்கு மேற்பட்ட எதையும் வழங்கக் கூடாது

## பௌத்த காங்கிரஸ் வற்புறுத்து

(கொழும்பு)

தேர்தலை முன்னிட்டு சிறிலங்கா பௌத்த காங்கிரஸ் தனது பேரினவாதக் கொள்கையை வெளிப்படுத்தும் வகையில் கடந்த திங்கள் அறிக்கையொன்று வெளியிட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக சிறிலங்கா பௌத்த காங்கிரஸ் கொண்டுள்ள கொள்கைகள் அவ் அறிக்கை மூலம் பிரதி பலித்துள்ளன.

இதில் சிறிலங்காவின் 20 முக்கிய பௌத்த பீடாதிபதிகள் ஒப்பமிட்டுள்ளனர். புத்த சாசன விவகார ஆலோசனைக் குழுவைச் சேர்ந்த மதிகை மகாநாயக்க தேரர் தலைமையில் 16 பிறபௌத்த அமைப்புகளும் இவ் அறிக்கை தயாரிப்பில் இணைந்து செயற்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு மாகாண சபைகளுக்கு மேற்பட்ட அதிகாரங்கள் எவையும் தீர்வாக வழங்கப்படக்கூடாது வடக்கு - கிழக்கு பிரதேசம் தமிழர் தாயகம் என்பதை அங்கீகரிக்கக் கூடாது சகல திட்டங்களும் செயற்பாடுகளும் நடவடிக்கைகளும் மத்திய அரசின் கவனத்தின் கீழேயே நடைபெற வேண்டும். சகல படை நடவடிக்கைகளும் மற்றும் விமான நிலையங்களும் துறைமுகங்களும் மத்தியஅரசின் கட்டுப்பாட்டில் இருத்தல் வேண்டும். அரசியல் அமைப்பின் 9 ஆவது சட்ட விதியின்படி 70 வீத பௌத்தர்களின் அனுமதியுடனேயே நாட்டின் எந்த பிரச்சினைக்கும் தீர்வு காணப்பட வேண்டும். எதிர் வரும் தேர்தலில் பௌத்தர்களின் பெறுமதி மிக்க வாக்குகள் இந்த அடிப்படையிலேயே வழங்கப்படல் வேண்டும். தேசிய இறைமையையும் பௌத்த மதத்தையும் நாட்டையும் அரசியல் ரீதியில் வெற்றி கொள்வதற்கு இப்பரிந்துரைகளின் அடிப்படையிலேயே தமது வாக்குகளை வாக்காளர்கள் வேட்பாளர்களுக்கு வழங்க வேண்டும்.

இவ்வாறு சிறிலங்கா பௌத்த காங்கிரஸ் தேர்தல் தொடர்பாக விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இன்று நள்ளிரவு முதல் ஊரடங்கு அமுலாகும் ?

(கொழும்பு)

இன்று நள்ளிரவு முதல் காலவரையறையற்ற ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்படலாம் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவித்துள்ளார்.

ஊரடங்குச்சட்டம் எப்போது நீக்கப்படும் என இப்போது கூறமுடியாது நாட்டின் நிலைமையைப் பொறுத்தே அது குறித்து முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். தேர்தலில் வெற்றியையோ தோல்வியையோ சரிசமமாக எடுத்துக் கொள்ளும்படியும் சிறிலங்காவின் நிலைமைகளை உலகம் உன்னிப்பாக அவதானித்து வருகிறது என்றும் ஹமில்டன் வனசிங்க தனது வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்.

# படையினர் நடவடிக்கை ஊவாவில் தீவிரமானது

## தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கையாம்

(கொழும்பு)

பதுளை, பண்டாரவளை பசறை முதலான பகுதிகளை உள்ளடக்கிய ஊவா மாகாணத்திலுள்ள தோட்டங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த புதன்கிழமை தொடக்கம் மேற்படி பகுதிகளில் இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படைப் பொலிசார் ஆகியோர் உள்ளடங்கிய பாதுகாப்புப் பிரிவினர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதே போன்று ஏனைய தோட்டப்பகுதிகளுக்கும் பாதுகாப்பு விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

தோட்டத் தொழிலாளர்கள் எந்த வகையிலான அச்சுறுத்தல்களுமின்றி வாக்களிக்க இத்தகைய பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தேர்தல் ஆணையாளருக்கு சுதந்திரம் வழங்கப்படும்

## சுதந்திரக்கட்சி பொதுச்செயலர்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணிஆட்சிஅமைக்கும் சமயத்தில் தேர்தல் ஆணையாளர், பொலிஸ் திணைக்களம் ஆகியன ஓர்சுதந்திர தேர்தல் ஒன்றை நடத்தக்கூடிய வகையிலான அரசியல் அமைப்பில் திருத்தம் கொண்டுவரப்படும் என சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், தற்போதுள்ள அதிகாரத்தின் படி தேர்தல் ஆணையாளர் தேர்தல் ஒன்று தொடர்பாக சுதந்திரமான நடவடிக்கை எதையும் செய்யப்படமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டதாக தெரிவித்தார்.

# தொலைக்காட்சி விவாதம் சந்திரிகாமீது ரணில் பழி

(கொழும்பு)

சந்திரிகாவும், ரணில் விக்கிரமசிங்காவும் கலந்து கொள்ளவிருந்த பகிரங்க தொலைக்காட்சி விவாதம் ஒன்று நடைபெறாது போனதற்கு ஒருவரையொருவர் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

பகிரங்க தொலைக்காட்சி விவாதத்தை ரூபவாஹினியில் நடத்த தாம் விடுத்த அழைப்பிற்கு சந்திரிகா பதில் தரவில்லை என ரணில் விடுத்த அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார் ஆனால் ரணில் இவ் அழைப்பை விடுத்த போது தாம் வெளிமாவட்டங்களில் பிரசார நடவடிக்கைக்காக தங்கியிருந்ததாகவும் எனினும் கொழும்பு திரும்பி விவாதத்திற்கு சம்மதம் அளித்த போதும் அதற்கு சரியான பதிலை ரணில் தரமுன்பாக தாம் மீண்டும் பிரசாரங்களுக்காக வெளிமாவட்டங்களுக்கு சென்றுவிட்டதாகவும் சந்திரிகா கூறியுள்ளார்.

# முஸ்லிம் பிரதிநிதிகள் அதிகளவில் தெரிவாகலாம்

(கொழும்பு)

யாழ் மாவட்டத்தில் தீவுப் பகுதிகளில் இடம்பெறும்தேர்தல்களில், தமிழ்வாக்காளர்களின் எண்ணிக்கைக்கும், முஸ்லிம் வாக்காளர்களின் எண்ணிக்கைக்கும் பெரியளவில் வித்தியாசமில்லாதநிலையில், முஸ்லிம் பிரதிநிதிகள் அதிகளவுதெரிவு செய்யப்பட வாய்ப்பு இருப்பதாக கொழும்பு வார இதழ் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தீவுப்பகுதிகளில், தமிழ்க் குழுக்கள் தங்களுக்குள்போட்டியிடுவதனால், முஸ்லீம்களின் வாக்குகள் ஒரு சேர முஸ்லிம் பிரதிநிதிகளை தெரிவு செய்ய வாய்ப்பளிப்பதாகவும் அவ் இதழ் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# ஐ.தே.க போல் கலகங்களில் ஈடுபட வேண்டாம்

## -சந்திரிகா கோரிக்கை

(கொழும்பு)

தேர்தலில் வெற்றி பெற்றால், எதுவித கலவரங்களிலும் ஈடுபட வேண்டாம் என பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களை பணித்துள்ளோம். 77 ல் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வென்றதும், அத்தனகலையில் நடத்திய வன்முறைகள் போல் எமது ஆதரவாளர்கள் ஈடுபட மாட்டார்கள் என பொதுஜன ஐக்கிய முன்னணி பிரதம வேட்பாளர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

அத்தனகலையில் 111 வீடுகளை எரித்தும், ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களை கைது செய்தும் தாக்கியும் ஐ.தே.க அரசு கொடூரம் விளைவித்தது. ஆயிரக்கணக்கானோரின் பதவிகள் பறிக்கப்பட்டன. இவ்வாறு எவற்றையும் நாம் செய்யப் போவதில்லை.

இம்முறை, பொலிசார் சுதந்திரமாக இயங்க வேண்டும். ஐ.தே.க அமைச்சர்கள் கூட எமது ஆதரவாளர்களை அச்சுறுத்துவதில் முன்னிற்கிறார்கள். எனவும் அவர் தெரிவித்தார்.

கூறமுடியாதது மட்டுமல்ல, அது நமக்குத் தேவையா தொன்றும் அல்ல. ஏனெனில், சிறிலங்கா தேர்தலானது தமிழ் மக்களைப் பொறுத்து ஒரு பயன்பாடு அற்ற தேர்தல் என்பதே உண்மையாகும்.

ஆனால், இலங்கையில் நடைபெறவுள்ள தேர்தலில் யார் வெற்றிபெறுவார்கள்? யார் ஆட்சி அமைப்பார்கள் என்று எதிர்வு கூறுவதில் சிக்கல் இருக்கின்றதே ஒழிய, தேர்தலின் போதும், தேர்தலின் பின்னரும் நடைபெறப்போகும் சில விடயங்கள், ஆனால் முக்கியமான விடயங்கள் பற்றி மட்டும் ஆருடங்கள் கூறக்கூடிய அரசியற் சூழ்நிலை மட்டும் உண்டு.

இந்தவகையில், நடைபெறப்போகும் தேர்தலானது, இதுவரை சிறிலங்காவில் நடைபெற்ற தேர்தல் களங்களைவிட வன்முறைக்களமாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதற்கான அறிகுறிகள் ஏற்கனவே தென்படத் தொடங்கியுள்ளன.

அடுத்ததாக இத்தேர்தல் பல தில்லு முல்லுகளையும், மோசடிகளையும் கொண்டதாகவும் அமையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே கள்ளவாக்குகள் அச்சிடப்பட்டுள்ளதான குற்றச்சாட்டுகள் கிளப்பப்பட்டுள்ளன அத்தோடு, ஆயுதபாணிக் குழுக்கள் தேர்தலில் போட்டியிடுவதென்பது, சுதந்திரமான தேர்தலுக்கு வழிவகுக்காது என்பதோடு, மோசடிகளுக்கு நிறையவே வழிவகுக்கும் எனவும் கூறமுடியும்.

ஆனால் எம்மைப் பொறுத்து/தமிழரைப்பொறுத்து யார் வெற்றி பெற்றால் என்ன? தோல்வி அடைந்தால் என்ன? எல்லாம் ஒன்றே, ஏனெனில் இனப்பிரச்சினைக்கு இதன் மூலம் ஒரு தீர்வு வருவதற்கு வாய்ப்புக்கள் எவையும் இருப்பதாக இல்லை.

ஆனால், தேர்தலின் பின் வரப்போகும் யுத்தம் ஆட்சியைக் கைப்பற்றுபவர்களைப் பொறுத்து சற்று முந்தலாம் அல்லது பிந்தலாம் ஆனால், யுத்தம்முடிவிற்கு வரும் என்றுமட்டும் எண்ணிவிடமுடியாது.

ஏனெனில், இனப்பிரச்சினை விவகாரத்தில் இரு கட்சியும் வெவ்வேறு கருத்துக்களை வெளியிட்டு வரினும், பொதுவில் இனப்பிரச்சினைக்கான அரசியல்தீர்வு எதையும் இவ்விருகட்சிகளும் கொண்டிருக்கவில்லை என்பதே நிதர்சனமாகும். இந்நிலையில், இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வே ஒரேவழி என்றும், ஐ.தே.க. மீண்டும் ஆட்சிக்கு வரின் விரைவிலேயே பாரிய இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம். அல்லது பொதுஜன ஐக்கிய முன்னணிஆட்சிக்கு வந்தால், சில சமயம்சிறிதுகாலம் யுத்தம் பின்தள்ளி வைக்கப்படலாம். ஆனாலும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எவரிடமும் இல்லை என்பதால், இறுதியில் யுத்தம் தவிர்க்க முடியாதே போகும். இந்நிலையில் இத்தேர்தல் பற்றி தமிழ்மக்கள் அக்கறை கொள்ளாமல் இருப்பதில் நியாயம் இல்லாமல் இல்லை.

---

வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த புதன்கிழமை தொ... இதே போன்று ஏனைய தோட்டப்பகுதிகளுக்கும் ... பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

# தேர்தல் வன்முறைக்கு அஞ்சி ஹோட்டல்களில் தஞ்சம்

## உள்ளூர் வாசிகளால் நிரம்பிவழிகின்றன

(கொழும்பு)

கொழும்பிலுள்ள நட்சத்திர ஹோட்டல்களில் உள்ளூர்வாசிகள் அதிகமாக தற்போது வந்து தங்கியிருப்பதாக சண்டேரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இன்று நடைபெறும் பொதுத் தேர்தலை தொடர்ந்து வன் முறைகள் வெடிக்கலாம் என்ற அச்சம் காரணமாகவே உள்ளூர்வாசிகள் பலரும் ஹோட்டல்களில் தற்காலிகமாக தங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஹோட்டல்களில் வெளிநாட்டுப் பயணிகள் தமது அறைகளை காலிசெய்வதில் தீவிரமாக இருப்பதாகவும் ஆனால் அதேசமயம் உள்ளூர் வாசிகள் ஹோட்டல்களில் தங்க பதிவு செய்துவருவதாகவும் தாஜ்சமுத்திரா ஹோட்டல் நிர்வாகத்தினர் குறிப்பிட்டதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

# கொழும்பிலிருந்து வடபகுதிக்கு பெருமளவு மக்கள் வருகை

## சண்டேலீடர் செய்தியாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இன்று நடைபெறும் தேர்தலை தொடர்ந்து வன்முறைகள் வெடிக்கலாம் என்ற அச்சத்தினால் கடந்த வாரம் 4000 பேர் வவுனியா தாண்டிக்குளம் தடை முகாமைத் தாண்டி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியான வடபகுதிக்குள் சென்றிருப்பதாக சண்டே லீடர் பத்திரிகையின் பாதுகாப்புச் செய்தியாளர் இக்பால் அதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

நாள் ஒன்றுக்கு 100 பேர் என்றரீதியில் வடபகுதியினுள் செல்கின்றனர். இவர்களில் அநேகமானோர் கொழும்பிலிருந்து வந்தவர்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

# இரண்டு தமிழ் ஆயுதக் குழுக்கள் பொ. ஐ. மு வுக்கு ஆதரவளிக்கும்

## சண்டே ரைம்ஸ் செய்தியாளர்

(கொழும்பு)

இம் முறைதேர்தலில்பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றால் அக்கட்சியுடன் இணைய இரு தமிழ் ஆயுதக் குழுக்கள் திட்டமிட்டுள்ளதாக சண்டேரைம்ஸ் பத்திரிகையின் செய்தியாளர் தெரிவித்துள்ளார். இக்குழுவினர் இம் முறை சுயேட்சைக்குழுக்களாக தேர்தலில் போட்டியிடுகின்றன. இதுவரை இவை ஐ. தே. க விற்கு ஆதரவாக செயற்பட்டதமிழ்க் குழுக்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதே சமயம் வேறு இரு தமிழ்க்குழுக்கள் தாம் தொடர்ந்தும் ஐ தே க வின் பக்கமே இருக்கப்போவதாக கூறியுள்ளதாகவும் அச்செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

---

வித்துள்ளார்.

அத்தனகலையில் 111 வீடு ... றார்கள் எனவும் அவர் தெரிவித்தார்,

# எம்.எஸ்.எப் தாதி மீது அதிரடிப்படை துப்பாக்கி சூடு

(கொழும்பு)

அம்பாறையில் விசேட அதிரடிப்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த பிரெஞ் மருத்துவ நிறுவனமான எம்.எஸ்.எப்பில் பணிபுரியும் தாதி கொழும்பிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இசபெல்ல கிறேக் (30) என்ற இந்த பிரெஞ் தாதி தமது சிங்கள நண்பருடன் கடற்கரையில் இருந்தபோது அதிரடிப்படை சிப்பாய் ஒருவர் இவர்களை விசாரிக்க முயன்றுள்ளார். அதற்கு இருவரும் பதிலளிக்காது மௌனமாக இருக்கவே இவர்கள் மீது அச்சிப்பாய் துப்பாக்கி சூடு நடத்தினார். இதனால் சிங்கள இளைஞர் பலியானார். பிரெஞ் தாதி காலில் படுகாயமடைந்தார். இச்சம்பவத்திற்கு எம் எஸ் எப் நிறுவனம் கண்டனம் தெரிவித்துள்ளது.

---

## கற்பகம் வெளியீடு

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தினரால் வெளியிடப்படும் மாதாந்த இதழான 'கற்பகம்' சென்றவாரம் வெளியிடப்பட்டுள்ளது. (88)

## திருக்குறள் போட்டிகள்

காரைநகர் மாணவர்களின் கல்வி அறிவினை ஊக்குவிக்குமுகமாக திருக்குறள் மனனப் போட்டிகள்நடாத்தப்படவுள்ளன.

மேற்படி போட்டிகளை வாரிவளவு நல்லியக்கச் சபையினர் நடாத்தவுள்ளனர். காரை மாணவர்கள் எங்கு கல்விபயின்றாலும் இந்த போட்டியில் பங்குபற்ற முடியும். அடுத்த மாதம் முற்பகுதியில் மேற்படி போட்டிகள் நடைபெறும்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994 08. 16**

**செவ்வாய் இரவு**

08. 01 - ஊர்சுற்றும் ஒலிவாங்கி
08. 10 - அறிந்துகொள்ளுங்கள் - தகவற்களஞ்சியம்
08. 20 - நலந்தானா- நிகழ்ச்சியில் '' இரத்தச்சோகை வியாதியினால் ஏற்படுகின்ற ஆபத்துக்களும் காரணங்களும், அவற்றை தடுப்பதற்கான வழிமுறைகளும் '' பற்றி வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்
08. 30 - செய்திகள்
08. 40 - கருத்துக்களம் ''வாக்குறுதி''
08. 50 - களமும் கானமும் -'' மைதானத்திலிருந்து போர்க்களத்திற்கு''

**1994. 08. 17**


**புதன் காலை**

07. 02 மாவீர வணக்கம்
07. 15 - நீங்கள்கேட்டவை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - நீங்கள்கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

Nallur Branch Library

கட்டுமுறிவு ராணுவ முகாம்தகர்ப்பு;


# விழுப்புண் பெற்ற ஐவர் வீரச்சாவு




2-வது லெப். பால்ராஜ்



2-வது லெப். சத்தியசீலன்/ சரண்ராஜ்



வீரவேங்கை வேல்ராஜ்



வீரவேங்கை செல்வன்/ அல்பேட்



11-08-94 அன்றுகட்டு முறிவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பின் போதுவிழுப்புண் அடைந்திருந்த ஐந்து போராளிகள் நேற்று முன்தினம் வீரச்சாவடைந்தனர் இவர்களுக்கு தமிழீழ விடுத

# தேர்தலைக் கண்காணிக்க 6000 அரச சார்பற்ற தொண்டர்கள்

(கொழும்பு)

இன்று நடைபெறும் பொதுத்தேர்தலைக் கண்காணிப்பதில் சில வெளிநாட்டவர்கள் உட்பட 6000க்கும் அதிகமான தொண்டர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தேர்தல் திணைக்களத்தால் இவர்களது பணி அங்கீகரிக்கப்படாத போதும், இவர்களது இலக்குகளை எட்டத் துணைபுரியும்படி அதிகாரிகளுக்கு அறிவுரை கூறப்பட்டுள்ளது. நீதியான-சுயாதீனமான தேர்தலுக்கான இயக்கம், நீதியான - சுயாதீனமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கைக்குழு, அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்ட மனித உரிமைகள் சட்டக்குழு, சர்வதேச சமாதானப்படை உட்பட இருபதுக்கும்மேற்பட்ட அமைப்புக்களிலிருந்து இத்தொண்டர்கள் திரட்டப்பட்டு உள்ளனர்.

சர்வதேச மனித உரிமைகள் சட்டக் குழு அமெரிக்கா, ஆசியா, ஐரோப்பிய நாடுகளில் இருக்கும் சில அவதானிகளின் அழைப்பின் பேரில் வருகை தந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதுதவிர அரசாங்கம் அழைத்துள்ள அவதானிகளும் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுவார்கள் என்பது தெரிந்ததே.

பாடசாலையில் விழா நடத்த

## மாகாணகல்விப்பணிப்பாளர் அனுமதி பெறவேண்டும்

(நல்லூர்)

பாடசாலைகளில் நடாத்தப்படும் விழாக்களில் பாடசாலைப் பரிசளிப்பு வைபவத்தைத் தவிர்ந்த ஏனையவற்றை நடாத்துவதற்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரின் முன் அனுமதியைப் பெறவேண்டும். இந் நடவடிக்கைகள் பாடசாலையின் கற்பித்தல் நடவடிக்கைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும் என்று கல்வி கலாசார அமைச்சின் செயலாளர் என். வி. கே. கே. வேரகொட சகல பாடசாலை அதிபர்களுக்கும் சுற்றுநிருபம் மூலம் தெரிவித்துள்ளார். (17)

## சைக்கிளுக்கு பணம்வழங்கிய பல்கலை. ஊழியர் விசனம்

யாழ். பல்கலைக்கழக ஊழியர்க்கு சைக்கிள் வாங்கித் தருவதாகக் கூறி பல்கலைக்கழக ஊழியர் சங்கம் பணம் பெற்று பல மாதங்களாகியும் இதுவரை எதுவித பலனும் கிடைக்காதது குறித்து ஊழியர்கள் விசனமடைந்துள்ளனர்.

மேற்படி பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கடந்த மே மாதம் தலா 5000 ரூபா வீதம் ஊழியர்களிடம் சைக்கிள் வாங்கித்தருவதாக கூறி பணம் பெற்றுள்ளது எனவும் பணம் பெற்று மூன்று மாதங்களாகியும் எதுவித பதிலும் கிடைக்காத நிலையில் இவ் ஊழியர்கள் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்திடம் விளக்கம் கோரி மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர் எனவும் தெரியவருகிறது. இம்மகஜரில் ''கடந்த, மே முதலாம் திகதிக்கும் 31ஆம் திகதிக்கும் இடையில் 5000 ரூபா வீதம் பணம் வசூலிக்கப்பட்டு சங்க தலைவர். பொருளாளர் கையொப்பமிட்டு ரசீதும் தரப்பட்டது. ஆனால் இன்றுவரை சைக்கிளும் தரப்படவில்லை. கட்டிய பணமும் மீளளிக்கப்படவில்லை. எனவே தாம் கட்டிய பணத்திற்கு என்ன நடந்தது? அவை சைக்கிள் கொள்வனவிற்கு முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தால் அல்லது வங்கியில் ஊழியர் சங்கக் கணக்கில் வைப்பிலிட்டிருந்தால் அவற்றை ஆதாரபூர்வமாக நிரூபிக்கவும்'' என கேட்கப்பட்டுள்ளது. இம்மகஜரில் 46 ஊழியர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

### பொதுத்

இவர்களிலிருந்து 196 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

வாக்களிப்பு பிற்பகல் 4.00 மணிக்கு முடிவடையும் பிற்பகல் 5.00 மணியளவில் வாக்குகள் எண்ணும் வேலை ஆரம்பிக்கும்.

### உலங்கு

னால் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

- வீரச்சாவடைந்த கப்டன் இசைமாறன் / கவாஸ்கர் (கனகராஜா பிரேமச்சந்திரன் - கிராமக்கோடு அன்ரன் கடைவீதி, பருத்தித்துறை )
- வீரவேங்கை கருநளன்

### கொழும்பிலிருந்து

விலானோர் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கு சென்றுகொண்டிருப்பதாகவும், மேலும் பலர் வவுனியா நோக்கி வந்துகொண்டு இருப்பதாகவும் அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. பெருமளவு மக்கள் ஏற்கனவே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும் குறிப்பிடத்

## மக்களின் விருப்புகளை பத்திரிகை மதிக்கவில்லை

(கொழும்பு)

தென்னிலங்கையின் பிரபல பத்திரிகைகள் ஆளும்கட்சியை ஆதரித்துவந்ததாகவும் இவைகள் மக்களின் விருப்பை கருத்தில் கொள்ளாது அரசாங்கத்தின் விருப்பை கருத்தில் கொண்டதாகவும் லண்டன் பி. பி. சி. சிங்கள சேவையின் கொழும்பு செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மக்களின் நலனை மையமாகக் கொண்டு பிரபல பத்திரிகைகள் தமது கடமையை சரிவர செய்யத் தயங்கியதாகவும் ஆனால் சிறு பத்திரிகைகள் ஓரளவுக்கு தன்னால் இயன்றவற்றை மக்களின் நலனை மையமாக கொண்டு செயற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மூன்றாவது ஓர் அணியை உருவாக்குவது தொடர்பாக ''இறு'' பத்திரிகை தன்னால் இயன்ற ஒத்துழைப்பை நல்கியதாகவும் அவர் மேலும் கூறினார்.

இது தொடர்பாக 'ராவய' ஆசிரியர் கருத்து தெரிவிக்கையில், மக்களின் விருப்புக்கு மாறாக பத்திரிகைகள் செயற்பட முடியாது என்றும் மக்களின் விருப்பை கொண்ட கட்சிக்கே தனது முழுமையான ஒத்துழைப்பை பத்திரிகை வழங்க வேண்டும் என தெரிவித்தார்.

### சுதந்திரமான

மேஜர் ஜெனரல் லக்கி அல்கம கூறியுள்ளார்.

பலாலி இராணுவ தளத்தில் இலங்கை வானொலிக்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில், வடக்கில் பாதுகாப்பு படையினரின் கட்டுப்

### தென்னிலங்கையில்

யில் வைக்கப்பட்டுள்ளதாகவும், அரசாங்கம் அறிவித்துள்ளது.

இத் தேர்தல் பாதுகாப்புக் கடமையில் சுமார் ஒருலட்சம் ஆயுதப்படையினர் ஈடுபடுத்தப்படவுள்ளனர். முழுமையான ஆயுதபாணிகளான இவர்களில் 80,000 பேர் பொலிசாராகும்.

இதேசமயம், ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் கடமையாற்றும் ஒவ்வொரு பொலிசாருக்கும் ஆயுதங்களும் தேவையானவைகளும் அளிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் கடமைக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் இக்னேசியஸ் கனகரத்தினம் சண்டே லீடருக்குத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் முன்னைய தேர்தல் காலங்களில் இவ்வாறு எல்லா பொலிஸ் நிலையங்களிலும், எல்லாப் பொலிசாருக்கும் ஆயுதங்கள் வழங்கப்படுவதில்லை எனவும் கூறியதோடு இத் தேர்தல் தேவைக்கென கண்ணீர்ப் புகைக்குண்டுகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்

இதேவேளை தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா கருத்துக் கூறுகையில், இரு தரப்பிலும் சில மோசமான செயல்கள் இடம்பெறக்கூடுமெனினும், நீதியான, சுதந்திரமான தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்த சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

## சிசிலின் வருகைக்கு சிங்கள மகாசபை பின்னணி

(கொழும்பு)

சிங்கள மகா சபையின் வேண்டுகோளின் பேரிலேயே முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ண சிறிலங்காவிற்கு அழைக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன,

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இவரை வரவேற்பதற்கு சிங்கள மகா சபைத் தலைவரும் இவரின் நெருங்கிய உறவினருமான டாக்டர் காமினி ஜயசூரியா மற்றும் நெவில் பர்னாண்டோ ஆகியோர் சென்றிருந்ததாகவும் இவர்களுடனேயே ஜனாதிபதியை சிசில் வைத்தியரட்ண சென்று சந்தித்ததாகவும் மேலும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தேர்தலுக்கான புதிதாக ஒருங்கமைக்கப்பட்ட ஓய்வு பெற்ற படை அதிகாரிகளை சிசில் விரைவில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளதாக தெரிகின்றது,

## பொ. ஐ. முவுக்கு 54 சதவீத வாக்குகள்

(கொழும்பு)

சிறிலங்காவின் பத்தாவது பாராளுமன்றத்திற்கான தேர்தலில் வாக்காளரின் மொத்தத்தொகையில் எழுபத்தி ஐந்து சதவீதத்தினருக்கும் எண்பத்திஐந்து சதவீதத்தினருக்கும் இடைப்பட்டவர்கள் வாக்களிப்பில் கலந்துகொள்வார்கள் என 'வெரித்தாஸ்' வானொலி எடுத்த கருத்து கணிப்பீட்டில் இருந்து தெரிய வந்துள்ளது.

இவ்வாறு வாக்களிப்பில் கலந்து கொள்ளுபவர்களில் கணிசமானவர்கள் ஓர் ஆட்சி மாற்றத்தை விரும்புகின்றதாகவும் சுமார் ஐம்பத்திநான்கு சதவீதத்தினர் இதற்காக பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வாக்களிப்பார்கள் எனவும் இக்கருத்துக் கணிப்பு மூலம் தெரியவந்துள்ளதாக ''வெரித்தாஸ்'' வானொலி மேலும் தெரிவித்துள்ளது.

தமிழ் ஒளி சனசமூக நிலையத்தின்



வீரவேங்கை
ராம்ராஜ்

களுக்கு தமிழீழ விடுத லைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## கொழும்புப் பயணியின் பணம், நகை திருட்டு

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்துயாழ்ப் பாணம் திரும்பிய பெண்மணி ஒருவரிடமிருந்து கிளாலியில் ஐம்பது ஆயிரம் ரூபா பணமும், நகைகளும் திருடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி விசாகமூர்த்தி என்பவரே பணத்தையும் நகைகளையும் பறிகொடுத்தவராவார்.

இவர் கொழும்பிலிருந்து சென்ற சனிக்கிழமை படகு மூலம் கிளாலிப் பகுதியை அடைந்ததாகவும் அங்கு இறங்கிய சிலமணி நேரத்தில் தமது பயண பையிற்குள் இருந்த ஐம்பது ஆயிரம் ரூபா பணமும் நகைகளும் திருடப்பட்டுள்ளதை கண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (88)

## லொறிச் சாரதி சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியாவில் லொறிச் சாரதி ஒருவரின் சடலம் துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் மீட்கப்பட்டது.

இராசையா இராசேந்திரம் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.


## தித்திக்கும் முத்தமிழ் அரங்கம்

இடம்: நல்லூர் மங்கயற்கரசி வித்தியாலயம்
காலம்: 16 - 8 - 1994 இரவு 8.00 மணி
நிகழ்ச்சிகள்: உருத்பிராய் சிவராஜினி குழுவினரின் நடன நிகழ்ச்சி

சுகுமார் இசைக்குழுவின் இன்னிசை நிகழ்ச்சி

(சி- 10118)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31- ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம்ஆண்டு மாதம் 16 ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


● வீரவேங்கை கருநளன் (பச்சைமுத்துகுமார் சின்ன சாலம்பன் ஒட்டி சுட்டான்)

இவ்விரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கம் செலுத்துகின்றனர்,

### ஷெல் வீச்சில்

கைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை தங்கவேலு (வயது 72) என்னும் வயோதிபர் நேற்று மரணமானார் இவருடன் சேர்த்து எறிகணை வீச்சுக்கு பலியானோர் எண்ணிக்கை ஒன்பதாக உயர்ந்துள்ளது. (சி, 88)

### உப்பு

3000 மெற்றிக் தொன் உப்பு இறக்குமதிக்கான கேள்வி விடுக்கப்பட்டிருப்பதுடன் 1000 மெற்றிக்தொன் உப்பை ஏற்கனவே இந்தியாவில் இருந்து கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் இறக்குமதி செய்திருக்கிறது. கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் உப்பு இறக்குமதிக்காக இரண்டு கோடி ரூபாவை ஒதுக்கியிருக்கிறது. உப்புக்கானதட்டுப்பாட்டை போக்குவதில் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் ஈடுபட்டுள்ளது.

### விழுப்புண்

காசம் சிவக்குணம், மட்டக்களப்பு)

● வீரவேங்கை வேல்ராஜ் (செல்லத்தம்பி கோணேசமூர்த்தி, மட்டக்களப்பு)

● வீரவேங்கை செல்வன்/அல்பேட் (பெரியதம்பி தவராசா, அம்பாறை)

● வீரவேங்கை ராம்ராஜ் (பொன்னுத்துரை கணேசமூர்த்தி, மட்டக்களப்பு)

ஆகிய ஐந்து போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம்செலுத்துகின்றனர்.

வந்து சேர்ந்ததும் குறிப்பிடத்தக்கது. (88)

### முதலாவது

தேர்தல் முடிவுகள் தேர்தல் தொகுதி, மாவட்டம், விருப்புத் தெரிவு வாக்குகள் என்ற அடிப்படையில் அறிவிக்கப்படும்.

ஐக்கிய தேசியக்கட்சி, இலங்கை மக்கள் கட்சியின் ஒஸி பிரிவு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், பகுஜன நிதாகஸ் பெரமுன என்பவற்றோடு இணைந்து தேர்தலில் போட்டியிடுகிறது. ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பிரேமச்சந்திரா பிரிவும் தேர்தலில் போட்டியிடுகிறது. பொதுஜன ஐக்கிய முன்னணியில், சிறிலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி சிறிமானி பிரிவு, கம்யூனிஸ்ட்கட்சி, இலங்கை மக்கள் கட்சி, தேசிய விடுதலை மக்கள் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செல்லச்சாமி பிரிவு என்பன இடம்பெற்றுள்ளன. மக்கள் ஐக்கிய முன்னணி தனிப்பட்டமுறையில் தேர்தலில் போட்டியிடுகிறது தமிழர் விடுதலைக் கூட்டணி, நவசமசமாஜ கட்சி என்பன சில இடங்களில் போட்டியிடுகின்றன.

தேர்தல் முடிவுகளை வெளியிடுவதற்கான உத்தியோக பூர்வ அனுமதி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கும், ரூபவாகினி கூட்டுத்தாபனத்திற்கும் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் முடிவுகள் வெளிவந்ததும் அவை உடனுக்குடன் அறிவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### படையினரின்

முகத்தை வந்தடைந்ததை அடுத்து மா இறக்கும் பணி உடனடியாக ஆரம்பமாகியது. (சி) (88)

காப்பு படையினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதிகளில் தேர்தல் நடத்தப்படும் வடபகுதி மக்கள் அச்சமும், இடையூறும் இல்லாத சூழ்நிலையில் வாக்களிக்க தேவையான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. வடக்கில் சுமார் 350 தேர்தல் அதிகாரிகள், கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் அரைவாசிக்கும் அதிகமானோர் கொழும்பிலிருந்து வந்துள்ளனர் எனவும் தெரிவித்தார்,

### கண்மூடித்

க்களை வன்மையாக மறுத்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எதிர்க்கட்சியினர் அரசுக்கு சேறு பூசும் முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகவும், அவர்களது கொள்கைகளில் இருக்கும் வறுமை நிலை காரணமாக தனிமனிதர்கள் மீது களங்கம் கற்பிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

### அவசரகால

தேர்தல் வன்முறைகள் நடைபெறலாம் என்றும் இதனைத் தவிர்க்கும் நோக்குடன் தான் இம்முடிவை எடுத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்,

பொதுத் தேர்தலை முன்னிட்டு கடந்த யூலை 15-ம் திகதி முதல் அவசரகாலச் சட்டம் வாபஸ் பெறப்படுவதாக முன்னர் தெரிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### நாளை

சொந்தமான தொழிற்சாலைகள், பெருந்தோட்டங்கள் உட்பட அனைத்துக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் பணிபுரியும் சகலருக்கும் முழுச் சம்பளத்துடன் கூடிய விடுமுறையாக இது அறிவிக்கப்பட்டுள்ளது. நாளையும், நாளை மறுதினமும் அரசாங்க வங்கி, வர்த்தக விடுமுறையாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.


## தமிழ் ஒளி சனசமூக நிலையத்தின் 34-வது ஆண்டு நிறைவு விழா

1. 5 மைல் மரதன் ஓட்டம் காலை 6-30 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன்பாக ஆரம்பமாகும். (ஆண்கள்)
2. 25 மைல் சைக்கிள் ஓட்டம் காலை 8-00 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன்பாக நடைபெறும் (ஆண்கள்)
3. வயது எல்லை கணிக்கப்படமாட்டாது. எவரும் பங்குகொள்ளலாம்.
4. விண்ணப்பங்களை கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்ப முடியுமானவர்கள் அனுப்பலாம் அல்லது நேரடியாக தொடர்பு கொள்பவர்கள் தொடர்பு கொள்ளலாம். அல்லது 21-08-1994 ஞாயிற்றுக் கிழமை போட்டியில் பங்கு கொள்ள விரும்புவோர் காலை 6-00 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன்பாக வந்து நேரடியாகத்தொடர்பு கொள்ளலாம்.

அனுப்பவேண்டிய முகவரி:

தமிழ் ஒளி சனசமூக நிலையம்
(பழைய பெயர்:- ஸ்ரீலங்கா சனசமூக நிலையம்)
உடுவில் வடக்கு,
உடுவில். (சி-10120)


## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் நடராசா

(ஓய்வுபெற்ற அதிபர், யா/காசிப்பிள்ளை வித்தியாலயம்)

திருநெல்வேலி கிழக்கு, பூதராயர் வீதியில் வசிப்பவரும், நல்லூர் யா/காசிப்பிள்ளை வித்தியாலயத்தின் ஓய்வுபெற்ற அதிபருமான பொன்னம்பலம் நடராசா அவர்கள் 11-08-94 அன்று கொழும்பில் காலமானார். அன்னாரது இறுதிக் கிரியைகள் 15-08-94 (திங்கட்கிழமை) அன்று கொழும்பில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

107, கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு.

பொ. இராசதுரை
(ஓய்வுபெற்ற சிரேஷ்ட அறிக்கையாளர், பாராளுமன்றம்)
(சகோதரன்)

(9111)